வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 30.09.2021 வியாழக்கிழமை | இதழ் : 299 | பக்கங்கள் : 16

# அமுலிலுள்ள ஊரடங்கு நாளையுடன் நீக்கம்

## இராணுவ தளபதி அறிவிப்பு



கொழும்பு, செப்ரெம்பர்30

நாட்டில் நடைமுறையிலுள்ள ஊரடங்கு சட்டம் நாளை வெள்ளிக்கிழமை அதிகாலை 4 மணி முதல் நீக்கப்படுகின்றது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் உத்தரவுக்கு அமையவே இந்த நடவடிக்கை மேற் கொள்ளப்படுவதாக இராணுவ தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். 15

## மேலும் 61 பேர் மரணம்

கொழும்பு, செப். 30

நாட்டில் கொரோனாத் தொற்றால் மேலும் 61 பேர் உயிரிழந்தனர்.

சுகாதார சேவைகள் பணிப் பாளர் நாயகத்தின் உறுதிப் படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப் பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 12 15

## 941 பேருக்கு நேற்று தொற்று

கொழும்பு, செப். 30

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான மேலும் 941 பேர் நேற்று அடை யாளம் காணப்பட் டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயி யல் பிரிவு தெரிவித்துள் ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப் படுத்தப்பட்டவர்க ளின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 16 ஆயிரத்து 465 ஆக அதிகரித் துள்ளது.

இதேவேளை, கொரோ னாத் தொற்றால் பாதிக்கப் பட்ட மேலும் 770 பேர் நேற்று குண 15

## ரூ. 50,000 கோடி இலங்கையில் நேரடியாக முதலிடுகிறது சீனா!

கொழும்பு, செப். 30

இலங்கையில் 250 கோடி டொலர் - நம்நாட்டு மதிப்பில் சுமார் 50 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான புதிய முதலீடு களை நேரடியாக சீனா செய் யும். இதற்கான உறுதிப்பாடு கள் எட்டப்பட்டுள்ளன என்று சீனாவுக்கான தூதுவர் பாலித கொஹன்ன 15

## இறக்குமதி கட்டுப்பாடுகளை குறைக்க பிரதமர் அறிவுறுத்து!

கொழும்பு, செப். 30

அத்தியாவசியமற்ற பொருள் கள் மற்றும் கருவிகளுக்கு இது வரை விதிக்கப்பட்டுள்ள இறக் குமதி கட்டுப்பாடுகளை முடிந் தளவுக்கு குறைக்கும் வகையில் நிவாரணம் வழங்குமாறு பிரத மர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் 15

## வடக்கில் 680 பாடசாலைகளை விரைவில் ஆரம்பிக்கும் பணிகள்!

### வட மாகாண ஆளுநர் அறிவிப்பு



யாழ்ப்பாணம், செப். 30

வடக்கு மாகாணத்தில் 200 மாணவர்களுக்கு உட்பட்ட 680 பாடசாலைகளை மீள ஆரம்பிப் பதற்கான விரைவான பணிகள் முன்னெடுக் கப்பட்டுள்ளன என்று வடமாகாண ஆளுநர் திருமதி பி. எஸ். எம். சார்ள்ஸ் 15

## வடக்கில் தொற்றால் ஆறு பேர் உயிரிழப்பு!

### போதனா மருத்துவமனை ஆய்வகம்

யாழ்ப்பாணம், செப். 30

கிளிநொச்சியை சேர்ந்த 3 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் கொரோனா தொற்றால் நேற்று ஆறு பேர் உயிரிழந்தனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வு கூடத்துக்கு நேற்று அனுப்பப்பட்ட மாதிரிகள் பி. சி. ஆர். சோத னைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போதே வடக்கில் 15

## முறையான முகாமைத்துவம் இல்லாவிடின் கொரோனாவால் அதிக அபாயம் ஏற்படும்!

### தொற்று நோய் விஞ்ஞான பிரிவு எச்சரிக்கை

கொழும்பு, செப். 30

நாட்டில் கடந்த 3 மாதங்க ளுக்கு முன்னர் காணப்பட்ட கோவிட் அச்சுறுத்தல் நிலைமை தற்போது குறைவடைந்திருந் தாலும், தற்போதைய நிலை மையை முறையாக முகாமைத் துவம் செய்யாவிட்டால் கடந்த மே மற்றும் ஜூன் மாதங்களில்




காணப்பட்டதைவிட அதிக அபாய நிலைமை ஏற்படக் கூடும் என்று சுகாதார அமைச் சின் தொற்று நோய் விஞ்ஞா னப் பிரிவின் பதில் பணிப்பா ளர் விசேட மருத்துவர் சமித்த கினிகே எச்சரிக்கை விடுத்துள் ளார்.

சுகாதார மேம்பாட்டு பணி யகத்தில் நேற்று புதன் கிழமை நடைபெற்ற 15

## இலங்கையில் மீண்டும் தாக்குதல் அச்சுறுத்தலா?

### பாதுகாப்பு அமைச்சு விளக்கம்

கொழும்பு, செப். 30

இலங்கையில் தேவாலயங் கள் மீது பயங்கரவாதத் தாக்கு தல் நடத்தப்படலாம் என சமூக வலைத்தளங்கள் மற்றும் இலத் திரனியல் ஊடகங்களில் பரவி வரும் செய்தி தொடர்பில் பாது காப்பு அமைச்சு விளக்கம ளித்துள்ளது.

இது தொடர்பில் 15



## இப்படியும் நடக்கிறது...!

பேருந்து நிலையத்தில் பழ வியாபாரம் செய்யும் முதியவர் ஒருவர், அந்தப் பேருந்தில் பழக் கூடையுடன் ஏறினார். “ஐந்து பழங்கள் பத்து ரூபாய்!” என்று கத்தியபடி பழங்களை விற்க முயன்றார். எவரும் பழம் வாங்க முன்வரவில்லை. சுமக்க முடியாமல் சுமந்தபடி முதியவர் கீழே இறங்கியதும்,

இளைஞன் ஒருவன் பேருந்தில் ஏறினான். “ஆறு பழங்கள் பத்து ரூபாய்!” என்று அவன் கத்தினான். அவனுக்கு நல்ல விற்பனை! மற்றொரு பேருந்தில் ஏறிய முதியவர் அங்கும், ஐந்து பழங்கள் பத்து ரூபாய்! என்று விற்க முயன்றார். பலன் இல்லாமல் போகவே, கீழே இறங்கி விட்டார். அடுத்து, “ஆறு பழங்கள் பத்து ரூபாய்” என்றபடி அந்தப் பேருந்தில் ஏறிய இளைஞன், ஏகத்துக்கு விற்பனை செய்தான்!

பெரிய கம்பெனியில் விற்பனை ஆலோசகராக பணியாற்றும் ஒருவர் இந்தக் காட்சியை பார்த்துக் கொண்டிருந்தார். முதியவரை அருகில் அழைத்தவர், “அந்த இளைஞனின் சாமர்த்தியம் உங்களிடம் இல்லையே! அவனுக்குப் போட்டியாக நீங்களும் ஆறு பழம் பத்து ரூபாய் என்று விற்றால்தானே உங்களுக்கு விற்பனை ஆகும். அதிகக் கொள்முதல் மூலம் குறைந்த விலைக்கு பழங்களை வாங்கி, இலாபத்தைக் குறைத்து அதிக விற்பனை செய்யப் பழகுங்கள் தாத்தா!” என்று தனது ஆலோசனை கூறினார் அவர்.

முதியவர் சிரித்தபடி, “அவன் என் மகன். இந்தப் பழமும் அவனுடையதுதான். ஆறு பழம் பத்து ரூபாய் என்று விற்றால் யாரும் உடனே வாங்குவதற்கு, நம்ம சனத்துக்கு மனசு வராது. அதனால் நான், ஐந்து பத்து ரூபாய்னு கூவிகிட்டு நான் போவேன். அப்புறமா, ஆறு பழம் பத்து ரூபாய்னு அவன் வந்து சொன்னதும் ‘அடடே இலாபமா இருக்கே’ என்று சனங்கள் சட்டென்று வாங்கிடுவாங்க’ என்றார்.

ஐரோப்பிய தூதுக்குழு ஒன்று இலங்கை வரவிருக்கின்ற செய்தி ஏற்கனவே தெரிந்ததுதான்.

இலங்கைக்கு வழங்கிவரும் ஜி. எஸ். பி. பிளஸ் சலுகையை தொடர்ந்து வழங்குவதென்றால் அரசாங்கம் பயங்கரவாத தடைச் சட்டத்தில் திருத்தம் செய்யவேண்டும் என்றும் மனித உரிமைகள் விடயங்களில் முன்னேற்றம் ஏற்படவேண்டும் என்றும் ஏற்கனவே கெடு விதித்திருக்கின்றது.

இலங்கையின் தற்போயை நிலைமைகள் குறித்து நேரில் ஆய்வு செய்வதற்காகவே இந்த ஐரோப்பிய தூதுக்குழு இலங்கைக்கு விஜயம் செய்கின்றது என்பதும் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தது.

இலங்கையின் மனித உரிமை விடயங்கள் தொடர்பாக ஆய்வு செய்வதற்கு ஒரு குழு வருகின்றது என்றால் அது நிச்சயம் சிறுபான்மைக் கட்சிகளின் தலைவர்களை சந்திக்கும் என்பது தெரிந்ததுதான்.

ஆனால், அந்தக் குழு வருவதற்கு முன்னரே நமது தலைவர்கள் ஐரோப்பிய தூதுவரை சந்தித்து, இலங்கை வரும் தூதுக்குழுவினர் கூட்டமைப்பை குறிப்பாக தலைவர் சம்பந்தனை சந்திக்கவேண்டும் என்று கோரிக்கை வைத்ததாகவும், அதனை அவர்கள் ஏற்றுக்கொண்டதாகவும் ஒரு செய்தி வெளிவந்திருந்தது.

அதுமட்டுமல்ல, அவர் தூதுக்குழுவை வந்து சந்திக்கக் கூடிய நிலையில் இல்லை என்றும், அவரை தூதுக்குழு வீட்டில் வந்து சந்திக்கவேண்டும் என்றும் கேட்டதாகவும் அதனையும் தூதுவர் ஏற்றுக்கொண்டாரென்றும்கூட சொல்லப்பட்டது.

தாங்கள் கோரிக்கை விடுத்ததால்தான் அவர்கள் சம்பந்தனை வீட்டில் வந்து சந்திக்கிறார்கள் என்று தமிழ் மக்கள் நம்புவவது நமது தலைவர்களுக்கு மகிழ்ச்சிக்குரியது என்றால் நம்பிவிட்டுப்போவோம்.

அந்தத் தூதுக்குழுவினர் சம்பந்தனைச் சந்திப்பதற்கு முன்னதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவரையும் அவரின் அலுவலகம் தேடிச் சென்று சந்தித்திருந்தனர்.

ஒருவேளை முஸ்லிம் காங்கிரஸின் நிசாம் காரியப்பர், முன்னதாகவே ஐரோப்பிய ஒன்றிய தூதுவரைச் சந்தித்து தங்கள் அலுவலகம் வந்து தங்கள் தலைவரை சந்திக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்திருந்தாரோ தெரியவில்லை.

எதுவோ, ஐரோப்பிய தூதுக்குழு சம்பந்தனை சந்தித்திருப்பது நல்லதுதான்.

பயங்கரவாத் தடைச்சட்டத்தை நீக்கினால்தான் ஜி. எஸ். பி. பிளஸ் சலுகையை தொடரமுடியும் என்று ஏற்கனவே கெடு விதித்திருக்கும் நிலையில் அதன் அவசியத்தை சம்பந்தனும் வலியுறுத்தியிருப்பார்.

அந்தச் சட்டம் மாற்றியமைக்கப்பட்டால், இன்று சிறையில் உள்ள நம்மவர்கள் பலரும் விடுதலையாவதற்கும் வழி ஏற்படலாம்.

பேருந்து நிலையத்தில் பழ விற்பனையில் ஈடுபட்ட வயோதிபர் போலத்தான், கெட்டித்தனமாக தமது அரசியல் வியாபாரத்தை விற்பனை செய்கின்றார்கள் நம்மவர்கள்.

யார் குத்தியாவது அரசியானால் சரிதானே.!

**- ஊர்க்குருவி**

# மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய மாணவர்கள் சாதனை

யாழ்ப்பாணம், செப். 30

அண்மையில் வெளியாகிய கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சை பெறுபேற்றில் சாவகச்சேரி மட்டுவில் யா/சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம் பாடசாலை வரலாற்றில் சாதனை படைத்துள்ளது.

2020 கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றிய ச.சஞ்சிதா என்ற மாணவி 9 ஏ சித்திகளைப்பெற்று பாடசாலை வரலாற்றில் முதல் தடவையாக 9 ஏ சித்தி பெற்ற மாணவி என்ற சாதனையை படைத்துள்ளார். அதே வேளை க.பிரியதர்சினி 8 ஏ சித்தி பெற்றுள்ளதுடன் செயன் முறைப்பரீட்சை முடிவுக்காக காத்திருக்கின்றார்.

இவர்களுடன் து.கஸ்தூரி 4ஏ ,2 பி,3சி, ச.கஜானன் 1 ஏ , 4பி, 1சி.2 எஸ், ம.இன்பரதி 1ஏ ,2பி, 2சி,2 எஸ், தி.சோபினி 4பி,3சி,2 எஸ் , இ.இந்துசன் 4சி,2எஸ், ஜெ .லகீசன் 3சி,3எஸ் பெற்று சித்திய டைந்துள்ளதாக அதிபர் கே.ரவீந்திரா தெரிவித்தார்.

# மன்னார் பிரதேச சபை மு. கா. வசம்!

மன்னார், செப். 30

மன்னார் பிரதேச சபையின் புதிய தவிசாளராக, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட்ட எம். ஐ. எம். இஸ்ஸதீன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

பிரதேச சபை மண்டபத்தில் வடக்கு உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் டிரஞ்சன் தலைமையில் நடந்த தவிசாளர் தேர்தலிலேயே இவர் தெரிவானார்.

தவிசாளர் தெரிவுக்கான போட்டியில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த உறுப்பினர் எம். ஐ. எம். இஸ்ஸதீன், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர் ஜே. ஈ. கொன்சல் குலாஸ், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் என். செபமாலை பீரிஸ் ஆகியோர் போட்டியிட்டனர்.

இரு சுற்றுக்களாக நடந்த தெரிவு முடிவில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட்ட எம். ஐ. எம். இஸ்ஸதீன் 9 வாக்குகளையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்ட ஜே. ஈ. கொன்சல் குலாஸ் 8 வாக்குகளையும் பெற்றனர்.

முன்னாள் தவிசாளரான எஸ். எச். எம். முஜாஹிர் பதவியை பயன்படுத்தி துஷ்பிரயோகம் செய்த குற்றத்திற்காக வடக்கு ஆளுநரால் அண்மையில் பதவி நீக்கப்பட்டதுடன், உறுப்பினர் உரிமையையும் இழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சிறுமி துஷ்பிரயோகம் இளைஞருக்கு மறியல்

மட்டக்களப்பு, செப். 30

மட்டக்களப்பில் அலைபேசியில் 10 வயது சிறுமிக்கு ஆபாச படத்தை காட்டி அவரை துஷ்பிரயோம் செய்த 21 வயது இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைதான நபர் நேற்று மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். இதன்போது அவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். (ஐ)

### கல்வி tv CHANNEL-1
**30.01.2021**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

### கல்வி tv CHANNEL - 2
**30.01.2021**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
30.09.2021 வியாழக்கிழமை
பிலவ வருடம், புரட்டாசி 14

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# யாரை ஏமாற்றுவதற்காக?

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கிடையில் சந்திப்பொன்று இடம்பெறவுள்ளதாகவும், இதன் போது பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரனின் தன்னிச்சையான செயல்பாடுகள் தொடர்பில் ஆராயவுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியிருக்கின்றன. இவ்வாறான சந்திப்புக்கள் பல, கடந்த காலத்திலும் இடம்பெற்றிருப்பதால், இது தொடர்பில் ஆச்சரியப்பட ஏதுமிருப்பதாக 'ஈழநாடு' கருதவில்லை.

கூட்டமைப்பின் உள்முரண்பாடுகள் சந்திகள் தோறும் அறிந்த சங்கதி. கடந்த பாராளுமன்ற தேர்தலின் போதும் கூட்டமைப்பின் உள்முரண்பாடுகள் சந்திகளில் சிரிக்கப்பட்டது. கடந்த பாராளுமன்ற தேர்தலின்போது, கூட்டமைப்பிற்குள் இடம்பெற்ற முரண்பாடுகளை விடவும், இலங்கை தமிழ் அரசு கட்சியின் உள்முரண்பாடுகள்தான் அதிகம் சந்திகளில் சிரிக்கப்பட்டது. குறிப்பாக சுமந்திரன் - சிறிதரன் அணி, மாவை - சரவணபவன் - ஆனல்ட் அணி என, இரு தரப்புக்களாக தேர்தலில் மோதிக் கொண்டமை அனைவரும் அறிந்த சங்கதி. சுமந்திரன் பங்குகொள்ளும் கூட்டங்களை மற்றவர்கள் தவிர்த்துக் கொண்டனர். அதேபோன்று பங்காளிக் கட்சிகளின் தலைவர்களும் சுமந்திரனோடு இணைந்து மக்களை சந்திப்பதை தவிர்த்துக் கொண்டனர்.

வவுனியாவில் இடம்பெற்ற கூட்டமொன்றில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், கூட்டமைப்புக்குள் இருக்கும் துரோகிகளை மக்கள் தோற்கடிக்க வேண்டும் என்றவாறு பிரசாரம் செய்திருந்தார். தேர்தல் முடிந்ததும், அவரவர்களுக்கு தேவையான வெற்றிகள் கிடைக்கப்பெற்றதும் அனைத்துமே காற்றில் பறந்து போயின. செல்வம் அடைக்கலநாதன் கூறிய துரோகிகள் யார் - அவர்கள் தோற்கடிக்கப்பட்டனரா அல்லது வெற்றிபெற்றனரா என்பது பற்றி மக்களும் கேட்கவில்லை. மக்கள் எப்போதுமே தங்களிடம் கேள்வி கேட்க மாட்டார்கள் என்னும் துணிவில்தான் அரசியல்வாதிகள் இவ்வாறெல்லாம் மேடைகளில் துணிந்து பேசுகின்றனர்.

தேர்தலில் சுமந்திரன் வெற்றிபெற்றார். சுமந்திரனை பொறுத்தவரையில் தன்னை எதிர்த்தவர்களையே மக்கள் தோற்கடித்திருக்கின்றனர். தர்க்க ரீதியாக நோக்கினால் சுமந்திரனின் கூற்று சரியானது. ஆனால், இங்குள்ள நகைச்சுவைக்குரிய விடயம், எவரெல்லாம் சுமந்திரனை எதிர்த்து பிரசாரம் செய்தார்களோ அவர்கள் அனைவரும் தொடர்ந்தும் சுமந்திரனோடுதான் பயணிக்கின்றனர். சுமந்திரன் தொடர்பில் மீண்டுமொரு சர்ச்சை எழுந்த போது, சுமந்திரனை கூட்டமைப்பின் பேச்சாளர் பொறுப்பிலிருந்து நீக்கி, அதனை தன்னிடம் தருமாறு, செல்வம் அடைக்கலநாதன் வேண்டுகோள் விடுத்திருந்தார். சம்பந்தன் இணங்கினாரெனவும் கூறப்பட்டது.

ஆனால் சுமந்திரனோ, இல்லை - அப்படி செய்ய முடியாது - அதனை சிறிதரனுக்குத்தான் வழங்க வேண்டுமென்று குறிப்பிட்டார். தமிழ் அரசு கட்சியின் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களும் சுமந்திரனையே ஆதரித்திருந்தனர். இன்று வரையில் கூட்டமைப்பின் பேச்சாளராக செல்வம் அடைக்கலநாதனும் இல்லை, சிறிதரனும் இல்லை. ஊடகங்களை, தென்னிலங்கை அரசியல்வாதிகளை, இராஜதந்திர சமூகத்தை பொறுத்தவரையில் இப்போதும் சுமந்திரன்தான் கூட்டமைப்பின் பேச்சாளர். இந்த நிலையில் சுமந்திரன் தன்னிச்சையாக செயல்படுகின்றார், அதனை விசாரிக்கப் போகின்றோம் என்றெல்லாம் கூறுவது யாரை ஏமாற்றுவதற்காக? வாக்களிக்கும் மக்களையா?

சுமந்திரன் தவறு என்றால் அவரை கூட்டமைப்புக்குள் கட்டுப்படுத்த வேண்டும். கடுப்படுத்த முடியாவிட்டால் வெளியேற்ற வேண்டும். அவரை கட்டுப்படுத்தவோ அல்லது வெளியேற்றவோ முடியாது என்றால், மற்றவர்கள் தமிழ் அரசு கட்சியுடனான உறவிலிருந்து தங்களை விலக்கிக்கொள்ள வேண்டும். ஆனால், இதுவரையில் இங்கு எதுவுமே நடக்கவில்லை. இனியும் எதுவுமே நடக்கப் போவதும் இல்லை. பின்னர் யாரை ஏமாற்றுவதற்காக இவ்வாறான கூட்டங்கள் இடம்பெறுகின்றன?



# தற்கொலை தீர்வல்ல...!

*உலகளவில் ஓராண்டிற்கு எட்டு இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் தற்கொலை செய்துகொள்கின்றனர் எனவும், ஒவ்வொரு 40 நொடிக்கும் ஒருவர் தற்கொலை செய்கிறார் என்றும் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. உலகளவில் நடைபெறும் மரணங்களுக்கான முக்கியக் காரணங்களில் தற்கொலை 10ஆவது இடத்தில் உள்ளது.*

*இலங்கையில் ஒரு இலட்சம் பேரில் 15 பேர் தற்கொலை செய்கின்றனர் என்கிறது புதிய புள்ளி விவரம். குறிப்பாக 15 முதல் 29 வயதுக்கு உட்பட்டவர்களின் மரணத்திற்கு மிக முக்கியமான காரணமாக தற்கொலை இருப்பதாகவும், தற்கொலைகளின் எண்ணிக்கையில் 15 முதல் 34 வயதுக்கு உட்பட்டவர்கள் இரண்டாவது இடத்திலும், 10 வயது முதல் 14 வயதுக்கு உட்பட்டவர்கள் மூன்றாவது இடத்திலும் உள்ளனரென ஆய்வுகள் தெரிவிக்கின்றன.*

*தற்கொலை செய்பவர்களில் 74 சதவிகிதம் பேர் படித்தவர்கள் என்றும், ஒவ்வொரு மணி நேரத்துக்கும் ஒரு மாணவர் தற்கொலை செய்துகொள்வதாகவும் புள்ளிவிவரம் கூறுகிறது. இத்தகைய தற்கொலைகளுக்கு காரணங்களாக இருப்பவை வறுமை, வேலையின்மை, ஏமாற்றம், பெற்றோருடன் சண்டை, பரீட்சை தோல்வி, வேலைப்பளு, சகிப்புத்தன்மையின்மை, போதைப் பழக்கம், இணைய வழி சூதாட்ட மோகம், விரக்தி, தொழிலில் இழப்பு, மனநோய், கடன் தொல்லை, உறவு முறிவு, காதல் தோல்வி போன்றவையே.*

*இவற்றுள் மூன்று காரணிகளே முக்கியமாக இருக்கின்றன. முதல் காரணி, மன அழுத்தம் எனலாம். இது ஒருவரை உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் பாதிக்கும். இது, பாதிக்கப்பட்டவர் தன் அறிவாற்றலின் மூலம் தீர்வு காணும் திறனைக் குறைத்து விடுகிறது. இரண்டாவது காரணமாக சுயக்கட்டுப்பாட்டை இழத்தல்.*

*உணர்ச்சி வசப்படுதல் கட்டுப்பாட்டை இழக்க வைத்து விடுகிறது. இதன் விளைவாக போதைப் பழக்கம் போன்ற தீய நடத்தைகள் ஏற்படும். உணர்ச்சி வசப்படும் தன்மை பயத்தையும், பதற்றத்தையும் அதிகரிக்கச் செய்து விடுகிறது. தவறான செயல்களை நிறுத்த இயலாததால் தற்கொலையே முடிவாய் அமைந்து விடுகிறது.*

*மூன்றாவதாக தாங்க முடியாத துயரங்கள் என்று சொல்லலாம். பெரும்பாலானோர் தவறு செய்துவிட்டால் தாங்கள் தோல்வி அடைந்துவிட்டதாக எண்ணுகின்றனர். தவறு செய்துவிட்ட தாங்கள் மன்னிப்புக்கு தகுதியற்றவர் என்று முடிவு செய்துவிடுகின்றனர். இதற்கு நீதி கொடுப்பதாக எண்ணி தற்கொலையை தேர்வு செய்து விடுகின்றனர்.*

*குற்ற உணர்ச்சியில் இருப்பவர்கள் அதிலிருந்து வெளியேறும் ஒரே வழியாக இந்த தற்கொலை முடிவுக்கு வந்து விடுகின்ற னர். தற்கொலை செய்து கொள்பவர்களில் 56.3 சதவிகிதம் பேர் தூக்கிட்டு கொள்கின்றனர். 25.8 சதவிகிதம் பேர் விஷம் குடித்து தற்கொலை செய்கின்றனர் என்றும் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.*

*உலக சுகாதார அமைப்பு தற்கொலை என்பது ஒரு தீவிர சமூக பிரச்னை என்றும், இதனை தகுந்த நேரத் தலையீடுகளின் மூலம் தடுக்கலாம் என்கிறது. தற்கொலை எண்ணம் உடையவர்கள் தங்களுக்கு ஏற்பட்டுள்ள சிக்கல்களிலிருந்து மீளவே முடியாது என்று எண்ணி ஒரு கற்பனையை உருவாக்கிக் கொள்வதாகவும், வாழ்க்கை மாறக்கூடியது என்ற புரிதல் இல்லாமல் மனச்சோர்வுக்கு ஆளாகி தற்கொலை செய்துகொள்ளும் முடிவினை எடுத்து விடுகிறார்கள் என்கிறார்கள் உளவியல் நிபுணர்கள்.*


*தற்கொலைக்கான அறிகுறிகளை கவனித்து எச்சரிக்கையாக இருப்பதன் மூலம் தற்கொலைகளை நம்மால் தடுக்க இயலும். இத்தகைய அறிகுறிகள் கொண்டவர்களை நண்பர்களோ, குடும்ப உறவினர்களோ அடையாளம் கண்டு, தங்கள் நேரத்தினை அவர்களுக்காக செலவு செய்வதன் மூலம் பெரும்பாலான தற்கொலைகளைத் தடுத்து விடலாம். தற்கொலை எண்ணம் உடையவரும் அதிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முயல வேண்டியது அவசியம்.*

*தனிமையில் இருப்பதை முற்றிலும் தவிர்த்தல், தனக்குப் பிடித்தவர்களிடம் மனம் விட்டு பேசுதல், தனக்கு விருப்பமான செயல்களில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளுதல் போன்ற செயல்கள் பலனளிக்கும். மன அழுத்தத்தைக் குறைக்க நடைப்பயற்சி, யோகாசனம் போன்றவற்றில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.*

*தற்கொலை என்பது எந்த பிரச்னைக்கும் தீர்வாக அமையவே அமையாது. தற்கொலை என்கிற மரண விளையாட்டு சுயநலம் மட்டுமில்லாமல் நம்மையும், நம்மைச் சுற்றி உள்ளவர்களுக்கும் நாம் செய்யக்கூடிய மன்னிக்க முடியாத துரோகம் என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.*

*கீழே விழுந்து விட்டால் எவ்வளவு வேகமாக மேலே எழுகிறோம் என்பதில்தான் நமது வாழ்க்கையின் வெற்றி அடங்கியிருக்கிறது. எனவே தற்கொலை என்ற பள்ளத்தில் விழாமல் இருப்போம். தற்கொலை எண்ணம் உள்ளவர்களையும் மனம் மாற்றுவோம். தற்கொலை எண்ணத்தைக் கொல்வோம் வாழ்வில் வெல்வோம்.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
மற்றவர்களுக்கு உங்கள் மீது இருந்த கோபம் குறையும். குடும்பச் சூழல் மகிழ்ச்சி தரும். அலுவலக பணிச்சுமை குறையும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடைபெற ஏற்பாடு செய்யப்படும்.

**இடபம்**
பயணத்துக்குத் திட்டமிடுவீர்கள். அதிர்ஷ்ட வாய்ப்பு வரும். வெளியூரில் உள்ள நெருங்கிய உறவினரிடம் இருந்து இனிய செய்தி வரும். புதிய பொருள் வாங்கும் திட்டம் நிறைவேறும்.

**மிதுனம்**
மனக்கவலைகள் அகலும் நாள். நிதி நிலை திருப்தி தரும். உடன்பிறந்தோர் உதவியை அதிகம் எதிர்பார்ப்பதற்கில்லை. எதிர்பார்த்த விஷயம் ஒன்றில் சாதகமான திருப்பம் உண்டு.

**கடகம்**
காலையிலேயே மனதிற்கு இனிய நிகழ்ச்சிகள் நடக்கலாம். நிம்மதி அளிக்கும் நிகழ்ச்சிகள் நடைபெறும். மகிழ்ச்சி தரும் நாள். பலநாள் தட்டிப் போய்க் கொண்டிருந்த நல்ல நிகழ்வு நடக்கும்.

**சிம்மம்**
எதிர்பார்ப்புடன் இருப்பவர்களுக்கு நல்ல செய்திகள் கிடைக்கும். வீடு கட்ட, பழுதுநீக்க முற்படுவீர்கள். குழந்தைகளால் மகிழ்ச்சி. குழந்தை பாக்கியம் வேண்டியவர்களுக்கு நல்ல செய்தி உண்டு.

**கன்னி**
கனவு நனவாகும். சகபணியாளர்கள் உதவிகரமாக இருப்பர். பணியிடத்தில் முன்பு இருந்த சச்சரவு நீங்கி அமைதி நிலவும். குடும்பத்தினரிடையே முன்பை விட ஒற்றுமை அதிகரிக்கும்.

**துலாம்**
உடல்நிலையில் புது பொலிவும், தெம்பும் உண்டாகும். இளைஞர்கள் தங்களின் தனித்திறமையை வெளிப்படுத்துவீர்கள். உணவுக் கட்டுப்பாடு தேவை. பொழுதுபோக்கு அதிகமாகும்.

**விருட்சிகம்**
தொடர்புகள் விரிவடையும். பணியிடத்தில் திசைத் திருப்பம் ஏற்படும். உங்களது செயல்கள் உங்களையே பாதிக்காமல் கவனமாயிருங்கள். பேச்சில் கவனமாக இருந்தால் பிரச்னை இருக்காது.

**தனுசு**
கவனக்குறைவால் பிரச்னை ஏற்படாதபடி பார்த்துக் கொள்ளுங்கள். புதிய நபர்களிடம் பண விஷயத்தில் எச்சரிக்கையாக இருங்கள். குடும்ப நபர்களிடையே ஒற்றுமை அதிகரிக்கும்.

**மகரம்**
முன்பு இருந்த மன உளைச்சல் குறைந்து நிம்மதி வரும். பணி பற்றிய சிறு பயணத்தால் நன்மை உண்டாகும். வாகனங்களில் சற்று எச்சரிக்கையுடன் செல்வது நல்லது.

**கும்பம்**
பிறரது செயல்களில் தலையிடாமல் இருப்பது உத்தமம். நெருங்கிய நண்பர் ஒருவர் மூலம் ஆதாயம் உண்டாகும். தேவைக்கேற்ப பண உதவி கிடைக்கும். பேச்சில் கருணை தேவை.

**மீனம்**
மனசாட்சிப்படி செயல்படுவீர்கள். குழந்தைகளின் வாழ்வு செழிக்கும். தள்ளிப்போட்ட வேலைகள் இன்று நல்லபடியாக முடியும். தேவையற்ற விவாதங்களில் இருந்து விலகி நிம்மதி காணுங்கள்.

# உள்ளூராட்சி தேர்தலில் தி.மு.க. கூட்டணி நூறு சதவீதம் வெற்றி பெற வேண்டும்

## கனிமொழி



சென்னை, செப். 30

அரசின் திட்டங்கள் மக்களை முழுமையாக சென்றடைய உள்ளாட்சி தேர்தலில் தி.மு.க. கூட்டணி கட்சியினர் 100 சதவீதம் வெற்றி பெற வேண்டும் என்று தென்காசியில் கனிமொழி எம்.பி. கூறினார்.

தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சிகளின் சார்பில் உள்ளாட்சி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் அறிமுக கூட்டம் தென்காசியில் நேற்று நடந்தது. அப்போது அவர் மேலும் கூறியதாவது:-

“தற்போது மு.க.ஸ்டாலின் தலைமையிலான ஆட்சி சிறந்த ஆட்சியாக நடைபெற்று வருகிறது. நாடு முழுவதும் பல பத்திரிகைகள் பாராட்டும் அளவிற்கு இந்த ஆட்சி நடைபெறுகிறது. பல மாநிலங்களில் தமிழகத்தில் தி.மு.க. ஆட்சி போல நமக்கும் கிடைக்காதா? என ஏங்குகிறார்கள். கடந்த 10 ஆண்டு காலத்தில் தமிழகம் மிகப்பெரும் வீழ்ச்சியை சந்தித்துள்ளது. மக்கள் நலத்திட்டங்கள் எதுவும் நடைபெறவில்லை. படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லை. உள்கட்டமைப்பு வசதிகள் எதுவும் செய்யவில்லை. புதிதாக தொழிற்சாலைகள் தொடங்குவதற்கு யாரும் வரவில்லை.

உள்ளாட்சி தேர்தலில் தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சியினர் 100 சதவீதம் வெற்றி பெற்றால் தான் மக்களுக்கு அரசின் திட்டங்கள் முழுமையாக சென்றடையும். எனவே, தி.மு.க. கூட்டணி கட்சிகள் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை அனைவரும் வெற்றி பெற செய்ய வேண்டும்” இவ்வாறு கனிமொழி எம்.பி. கூறினார்.

# ஊழல் வழக்கில் முன்னாள் அமைச்சர் குற்றவாளி



சென்னை, செப். 30

கடந்த அ.தி.மு.க.ஆட்சியின் போது நடைபெற்ற ஊழல் வழக்கில் முன்னாள் அமைச்சர் இந்திர குமாரி உள்ளிட்ட 3 பேர் குற்றவாளிகள் எனச் சென்னை சிறப்பு நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்தது.

கடந்த 1991 -1996 அதிமுக ஆட்சியின் போது இலவச வேட்டி, சேலை, பள்ளிக் குழந்தைகளுக்கு இலவச செருப்பு வழங்கியதில் முறைகேடு செய்ததாக இந்திரகுமாரி மீது வழக்குத் தொடரப்பட்டது. ஆனால், இந்த வழக்கில் அப்போதைய சமூக நலத்துறை அமைச்சராக இருந்த இந்திரகுமாரி உட்பட அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்நிலையில் இந்திரகுமாரி மீது மற்றொரு வழக்குப்பதிவு செய்யப்பட்டது. 1997ஆம் ஆண்டு சமூக நலத்துறையின் செயலாளராக இருந்த லட்சுமி பிரானேஷ் , இந்திரகுமாரி உள்ளிட்டோர் மீது புகார் கொடுத்தார்.

புகார் மனுவில், மாற்றுத் திறனாளிகளுக்கான பள்ளி நடத்துவதாகக் கூறி இந்திர குமாரியின் கணவர் பாபு அரசு பணத்தில் ரூ.15.45 இலட்சம் முறைகேடு செய்திருப்பதாகக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்த புகாரின் பேரில் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் சமூக நலத்துறை அமைச்சராக இருந்த இந்திரகுமாரி, சமூக நலத் துறையின் முன் னாள் செய லாளர் கிருபாகரன், ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறையின் முன்னாள் இயக்குநர் சண்முகம். இந்திரகுமாரியின் கணவரும், வழக்கறிஞருமான பாபு, இந்திர குமாரியின் உதவியாளர் வெங்கடகிருஷ்ணன் ஆகியோர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

இவ்வழக்கில் விசாரணை நிறைவு பெற்ற நிலையில் நேற்று தீர்ப்பு அளிக்கப்பட்டது. முன்னாள் அமைச்சர் இந்திரகுமாரி, அவரின் கணவர் பாபு உள்ளிட்டோர் குற்றவாளிகள் என்று நீதிபதி அலிசியா தீர்ப்பளித்தார். இவர்கள் இருவருக்கும் 5 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

# ஊடகங்களில் தமிழக பா.ஜ.க. மரியாதையும், நம்பிக்கையும் கொண்டிருக்கிறது

## அண்ணாமலை தெரிவிப்பு



சென்னை,செப். 30

பத்திரிகை மற்றும் ஊடகத்தின் மீது தமிழக பா.ஜ.க. மிகப் பெரும் மரியாதையும் நம்பிக்கையும் கொண்டிருக்கிறது என அக்கட்சியின் மாநிலத் தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது ருவிற்றர் பக்கத்தில் அடுத்தடுத்து பகிர்ந்த ருவிற்களில், “ஜனநாயகத்தின் தாங்கும் தூணாக மதிக்கப்படும் பத்திரிக்கைகள் மற்றும் ஊடகத்தின் மீது பாரதிய ஜனதா கட்சிக்கு பெரும் மரியாதை உண்டு. நல்லவற்றை எடுத்துரைத்து, அல்லவற்றை கண்டித்து சுட்டிக்காட்டும் உற்சாகப்படுத்தும் உணர்வூட்டும் பாராட்டும் வழங்கி, மக்களின் மனக் கண்ணாடியாக ஊடகமும் பத்திரிக்கைகளும் திகழ்கின்றன என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

தமிழக பாரதிய ஜனதா கட்சியின் வளர்ச்சியில் பத்திரிக்கைகளின் பங்கு இன்றியமையாதது அந்த அக்கறையும் ஆதரவும் பாரதிய ஜனதா கட்சிக்கு தாங்கள் தொடர்ந்து வழங்க வேண்டும்.

தமிழகத்தில் உள்ள பத்திரிகை மற்றும் ஊடகத்தின் மீது தமிழக பாரதிய ஜனதா கட்சி மிகப் பெரும் மரியாதையும் நம்பிக்கையும் கொண்டிருக்கிறது” எனத் தெரிவித்துளள்ளார்.

அண்மையில் சென்னையில் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில் பா.ஜ.கவின் மூத்த தலை வர்களுள் ஒருவரான எச். ராஜா பத்திரிகையாளர்களை தரக்குறைவாகப் பேசியதாகப் புகார் எழுந்தது. இதற்குப் பல் வேறு தரப்பிலிருந்தும் கண்டனங்கள் எழுந்து வருகின்றன.

இத்தகைய பின்னணியில், பத்திரிகை மற்றும் ஊடகத்தின் மீது தமிழக பா.ஜ.க. மிகப் பெரும் மரியாதையும் நம்பிக்கையும் கொண்டிருக்கிறது என மாநிலத் தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

# சஜித்தின் திட்டத்துக்கு ரணில் கடும் எதிர்ப்பு!

## எந்தவொரு தேர்தலையும் இப்போதைக்கு நடத்தவேண்டாம் என்றும் வலியுறுத்து

கொழும்பு, செப். 30

**“கொரோனா வைரஸ் தொற்று முழுமையாக கட்டுக்குள்வரும்வரை எந்தவொரு தேர்தலும் நடத்தப்படக்கூடாது.” -என்று ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவரும், முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

தற்போதைய அரசு பதவி விலகி, மக்கள் ஆணையை பெறுவதற்காக தேர்தலொன்று நடத்தப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் முன்வைக்கப்பட்டுள்ள அறிவிப்பு தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியவை வருமாறு:

கொரோனா வைரஸ் பரவல் உள்ள சூழ்நிலையில் தேர்தலொன்றை நடத்துவது பொருத்தமா என சிந்திக்க வேண்டும். கொரோனாவுக்கு மத்தியில் கனடா பிரதமர் தேர்தலுக்குச் சென்றார். அவர் சிறப்பாக பொருளாதாரத்தை நெறிப்படுத்தினார். வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்தினார். இதனால் பெரும்பான்மை பலம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் தேர்தலுக்கு சென்றார். ஆனால், பெரும்பான்மை பலம் கிடைக்கவில்லை.

கொரோனாவுக்கு மத்தியில் தேர்தல் நடைபெறுவதற்கு அந்நாட்டு மக்கள் அதிருப்தியை வெளியிட்டுள்ளனர். எனவே, கொரோனா முழுமையாக கட்டுக்குள் வரவில்லை. மீண்டுமொரு சுற்று வரலாம். எனவே, தற்போதைய சூழ்நிலையில் கொரோனாவை கட்டுப்படுத்துவதற்கும், பொருளாதாரத்தை மீட்பதற்குமே நாம் முன்னுரிமை வழங்க வேண்டும். இவ்விரு விடயங்களையும் சீர்செய்த பின்னர் தேர்தலுக்கு செல்லலாம்-என்றார்.



## அத்தியாவசிய பொருள்களுடன் 400 கொள்கலன்கள் விடுவிப்பு

கொழும்பு, செப். 30

கொழும்புத் துறைமுகத்தில் தேங்கியுள்ள அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய 800 கொள்கலன்களில் 400 கொள்கலன்கள் இதுவரையில் விடுவிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

டொலர் தொடர்பாக ஏற்பட்டுள்ள பிரச்னை காரணமாக குறித்த கொள்கலன்கள் துறைமுகத்தில் தேங்கியிருந்தன.

எவ்வாறாயினும் குறித்த கொள்கலன்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதமர் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இதற்கமைய, கொழும்புத் துறைமுகத்தில் தேங்கியிருந்த 800 கொள்கலன்களில் 400 கொள்கலன்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அமைச்சரவை உறுதியளித்ததைப் போன்று அத்தியாவசிய பொருள்கள் அடங்கிய கொள்கலன்களை விடுவிப்பதற்கு தேவையான டொலரை மத்திய வங்கி வழங்கினால், அதனை முழுமையாக ஒரு வாரத்துக்குள் விடுவிக்க முடியும் என இறக்குமதியாளர்கள் சங்கத்தின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

## பாடசாலைகள் திறக்கப்பட்டாலும் கற்பித்தல் செயல்பாடு இடம்பெறாது

### இலங்கை ஆசிரியர் சங்கம் கூறுகிறது

கொழும்பு, செப். 30

பாடசாலைகள் திறக்கப்பட்டாலும், ஆசிரியர்களின் சம்பளப் பிரச்னை தீரும் வரை அவர்கள் கற்பித்தல் செயல்பாட்டில் பங்கேற்கமாட்டார்களென இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

கல்வி அமைச்சின் செயலாளர் அதிபர், ஆசிரியர்களின் பிரச்சினையை தீர்க்காமல் ஊடக சந்திப்புகளில் முரண் பாடான அறிக்கைகளை கூறி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எந்த அடிப்படையில் கல்வி அமைச்சின் செயலாளர் மீண்டும் வேலை செய்யச்சொல்கிறார்? அவரது நகைச்சுவைகளை யார் ஏற்றுக்கொள்வார்கள்? உடனடியாக இந்த நகைச்சுவைகளைச் சொல்வதை நிறுத்துங்கள். பாடசாலைகளை திறந்து நடைமுறை ஆய்வுகளை நடத்துவதற்கு முன்பு என்ன செய்ய வேண்டும்? முதலில் எமது பிரச்னைக்கு ஒரு தீர்வைக் கொடுங்கள்.

அவர் ஒக்ரோபரில் தனியாக பாடசாலையைத் தொடங்க முயற்சித்திருக்கலாம். இந்த வேலை நிறுத்தத்துக்கு 80 நாள்களாகின்றன. நாங்கள் குழந்தைகளைப் பற்றி சிந்திக்கிறோம். பாடசாலைகள் தொடங்குவதற்கு முன்பு கல்வி அதிகாரிகள் முறையான முடிவை எடுப்பார்களென்று நினைக்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

## சாரதி அனுமதிப்பத்திரம் அச்சிடும் பொறுப்பு வெளிநாட்டு நிறுவனத்துக்கு வழங்கப்படாது

கொழும்பு, செப். 30

இந்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் இராணுவத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டிருக்கும் சாரதி அனுமதிப்பத்திரம் அச்சிடும் பொறுப்பை வெளிநாட்டு நிறுவனமொன்றுக்கு வழங்க எந்த முடிவும் எடுக்கப்படவில்லையென்று மோட்டார் போக்கு வரத்து ஆணையாளர் நாயகம் சுமித் அழககோன் கூறினார்.

ஆஸ்திரிய நிறுவனத்துக்கு இந்த பொறுப்பை கையளிக்க ஏதும் திட்டம் உள்ளதா? என வினவியதற்கு அவர் பதிலளித்த போதே இவ்வாறு தெரிவித்தார்

சாரதி அனுமதிப் பத்திரம் அச்சிடத் தேவையான அட்டைகள் ஆஸ்திரியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படுவதாக அவர் வலியுறுத்தினார்.

2019 டிசெம்பர் இறுதி வரை தனியார் நிறுவனம் ஒன்றினாலே இந்தப் பணி மேற்கொள்ளப்பட்டது. மெட்ரோபொலிடன் நிறுவனத்தின் கீழ் பல ஆண்டுகளாக ஒப்பந்தம் இல்லாமல் அச்சிடப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரம் அச்சிடும் பொறுப்பு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அறிவுறுத்தலின் பேரில் ஜனவரி 01 முதல் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆண்டுக்கு ரூ.8 கோடி சேமிக்க முடியும் என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம கூறினார்.

## ஊழியர்களை வேலைக்கு அழைத்தல்; இன்னமும் இறுதியான முடிவு இல்லை!

கொழும்பு, செப். 30

ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் சகல அரச மற்றும் தனியார் ஊழியர்களை வேலைக்கு அழைப்பது தொடர்பில் இன்னும் தீர்மானம் எடுக்கப்படவில்லை. கலந்துரையாடலின் பின்னர், நாட்டின் நிலைமை கருத்திற்கொண்டே இது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும் என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன் தினம் முற்பகல் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

இதன்போது எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அதேவேளை, ஒக்ரோபர் முதலாம் திகதி ஊரடங்கு சட்டத்தை தளர்த்தவேண்டும் என்பதுதான் அரசால் கடந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானமாகும். எனினும், அடுத்த கொரோனா ஒழிப்பு செயலணிக் கூட்டத்தில் இது தொடர்பில் இறுதி முடிவு எட்டப்படும்.

30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இரு தடுப்பூசிகளும் ஏற்றப்பட்டு இரு வாரங்களின் பின்னர் சிறந்த நோய் எதிர்ப்பு சக்தி கிடைக்கின்றது. இவ்விடயம் உட்பட விஞ்ஞானபூர்வமான சில காரணிகளை அடிப்படையாகக்கொண்டே ஒக்ரோபர் முதலாம் திகதிவரை ஊரடங்கு சட்டம் நீடிக்கப்பட்டது. தற்போது தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துவருகின்றது. மரண எண்ணிக்கையும் வீழ்ச்சியடைந்துள்ளது. எனவே, ஒக்ரோபர் மாதம் முதல் புது யுகத்துக்குள் காலடி வைக்க முடியும் என நம்புகின்றோம்.” என்றும் அமைச்சர் கூறினார்.

## பல்கலைக்கழகங்கள் நவம்பர் மாதம் திறப்பு

கொழும்பு, செப். 30

எதிர்வரும் நவம்பர் மாதத்தில் பல்கலைக் கழகங்களை மீளத் திறப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க இதனைத் தெரிவித்தார்.

20 முதல் 30 வயதுக்கு இடைப்பட்டவர்களுக்கான தடுப்பூசி செலுத்தும் பணிகளை அரசாங்கம் அடுத்த மாத இறுதிக்குள் நிறைவு செய்யுமாயின், எதிர்வரும் நவம்பர் மாதம் பல்கலைக்கழகங்களை மீளத் திறக்க முடியும் என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, பல வருடங்களுக்கு பின்னர் பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 10,000 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, பல்கலைக்கழகங்களுக்கு 42,000 மாணவர்கள் தகுதி பெற்றுள்ளனர்.

எதிர்காலத்தில் இவ்வாறான அதிகரிப்பை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.

## சமையல் எரிவாயு விலை ரூ.150 வரை குறையலாம்!

கொழும்பு, செப். 30

சமையல் எரிவாயு நிறுவனங்களை இணைத்து புதிய நிறுவனம் அமைத்திருப்பதன் ஊடாக சமையல் எரிவாயு விலைகளை 125 முதல் 150 ரூபாய் வரை குறைக்க வாய்ப்பு இருப்பதாக இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார்.

சந்தையில் சமையல் எரிவாயு தட்டுப்பாடு தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போது இத்தகவலை தெரிவித்தார்.

இதன்போது இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன மேலும் தெரிவிக்கையில்-

உலகச் சந்தையில் சமையல் எரிவாயு விலை உயர்ந்தமை மற்றும் டொலர் அதிகரிப்பு காரணமாக விலை அதிகரிக்க கம்பனிகள் கோரின. இது குறித்து நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை ஆராய்ந்து அமைச்சரவை உபகுழுவொன்றை நியமித்தது.

நிறுவனங்களின் செயற்திறனின்மையை சீர் செய்து பாவனையாளர்களுக்கு அதன் நன்மையை அளிக்க முடிவு செய்யப்பட்டது. இந்த நிலையிலே எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டது.

எனவே இரு சமையல் எரிவாயு நிறுவனங்களையும் இணைத்து அரச நிறுவனமாக செயல்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்பொழுதுள்ள விலையை விட 125-150 ரூபாய் வரை குறைக்க வாய்ப்புள்ளது.

இதற்காகவே புதிய நிறுவனம் அமைக்கப்பட்டு தலைவர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார். பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்டுள்ளது-என்றார்.

# அரிசி இறக்குமதி முடிவுக்கு நான் உடன்படவேயில்லை

## விவசாய அமைச்சர் எதிர்ப்பு

கொழும்பு, செப். 30

**“வெளிநாட்டிலிருந்து அரிசி இறக்குமதி செய்யும் தீர்மானத்துடன் நான் உடன்படவில்லை.”_ என்று விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

வெளிநாட்டிலிருந்து அரிசி இறக்குமதி செய்யப்படுவதற்கு நான் கடும் எதிர்ப்பை வெளியிட்டேன். அதேபோல நெல்லைச் சந்தைக்கு வழங்குமாறு விவசாயிகளிடம் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்தேன். எனினும், விவசாயிகள் நிறுத்தினர். இதனால் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது.

மறுபுறத்தில் அரிசி



இல்லை, உணவு இல்லை என விமர்சனங்களும் எழுந்தன. எனவே, மாற்று வழி என்ன? எனவேதான் விருப்பமில்லாவிட்டாலும் இறக்குமதி செய்யும் முடிவு எடுக்கப்பட்டது.

அரிசி இறக்குமதி செய்யப்படுவதால் குறைந்த விலைக்கு அரிசியை வழங்கக்கூடியதாகவும் இருக்கும்-என்றார்.

# 500 சீனி கொள்கலன்களை சதொசவுக்கு வழங்க முடிவு

கொழும்பு, செப். 30

துறைமுக அதிகார சபையில் பொறுப்பிலுள்ள சுமார் 500 சீனிக் கொள்கலன்களை சதொசவுக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த சீனிக் கொள்கலன்களை சதொசவுக்கு வழங்குவதற்கு தமது சங்கம் இணங்கியுள்ளதாக சீனி இறக்குமதியாளர்கள் சங்கத்தின் உப தலைவர் நிஹால் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

சீனி இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட சீனி கொள்கலன்களே இவை என அவர் கூறியுள்ளார்.

இதனிடையே, இந்த விடயம் தொடர்பில் சீனி இறக்குமதியாளர்களுடன் கலந்துரையாடவுள்ளதாக லங்கா சதொச தலைவர் ஓய்வுபெற்ற ரியர் அட்மிரல் ஆனந்த வீரசேகர தெரிவித்துள்ளார்.

இதன்போது குறித்த சீனியை சதொசவுக்கு வழங்கும் விலை தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

சதொசவுக்கு வழங்கப்படும் சீனி, நாடளாவிய ரீதியில் உடனடியாக விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

# 333 பேர் கைது!

கொழும்பு, செப். 30

தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 333 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை 6 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் 21 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறியதாக இதுவரை 79,247 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் மேற்கு மாகாணத்தில் நுழையும் மற்றும் வெளியேறும் இடங்களில் 1,149 வாகனங்கள் சோதனை செய்யப்பட்டன. தனிமைப்படுத்தப்பட்ட விதிமுறைகளை மீறி பயணிக்க முயன்ற 251 நபர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர் எனப் பொலிஸார் கூறினர்.

# நாவற்குழி பகுதியில் வீடு புகுந்து தாக்குதல்

## தந்தை மற்றும் இரு மகன்கள் காயம்



யாழ்ப்பாணம், செப். 30

நாவற்குழிப் பகுதியில் வன்முறைக் கும்பல் ஒன்று வீடு புகுந்து அங்கிருந்த தந்தை மற்றும் இரு மகன்கள் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளதுடன், வீட்டின் மீதும் தாக்குதல் மேற்கொண்டுள்ளது.

நாவற்குழி ஜே / 294 கிராம சேவையாளர் பிரிவில் உள்ள வீடொன்றுக்குள் நேற்று முன் தினம் இரவு அத்துமீறி நுழைந்த வன்முறைக் கும்பல் வீட்டின் ஜன்னல்கள், கதவுகளை உடைத்து அட்டகாசம் புரிந்ததுடன் அங்கு இருந்த தந்தை மற்றும் மகன்கள் இருவர் மீது சரமாரியாக தாக்குதல் நடத்தி விட்டு தப்பியது.

தாக்குதலில் காயமடைந்த தந்தை , இரு மகன்களையும் அயலவர்கள் மீட்டு யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக சேர்த்துள்ளனர். சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# முல்லைத்தீவு மாவட்ட செயலருக்கு கொரோனா

முல்லைத்தீவு, செப். 30

முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் க.விமலநாதனுக்கு, கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவருக்கு கொரோனா தொற்று அறிகுறிகள் காணப்பட்டதையடுத்து மேற்கொண்ட பி.சி.ஆர் பரிசோதனையில், கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து, அவர் தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சையை பெற்று வருகின்றார்.

# அத்தியாவசிய பொருள்களை விடுவிப்பதற்கு 50 மில்லியன் டொலர் வழங்கிய மத்திய வங்கி

கொழும்பு, செப். 30

கொழும்புத் துறைமுகத்தில் சிக்கியுள்ள அத்தியாவசிய உணவுப் பொருள்களை விடுவிப்பதற்காக இலங்கை மத்திய வங்கி சுமார் 50 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது.

குறித்த 50 மில்லியன் அமெரிக்க டொலர்கள் 2 அரச வங்கிகள் ஊடாக இறக்குமதியாளர்களுக்கு வழங்கப்படவுள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

அத்தியாவசியப் பொருள்களை விடுவிக்க இதற்கு மேலதிகமாக அதிக பணம் தேவைப்பட்டால் இலங்கை மத்திய வங்கி அதனை வழங்க தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## மன்னார் பிரதேச சபையின்

# புதிய தவிசாளர் நியமனத்துக்கு நீதிமன்றம் இடைக்கால தடை

மன்னார், செப். 30

மன்னார் பிரதேச சபைக்கான புதிய தவிசாளரை நியமித்து, வர்த்தமானி வெளியிடுவதை தடுத்து, மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால், வடமாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளருக்கு நேற்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண ஆளுநரால், மன்னார் பிரதேச சபை தவிசாளர் பதவி மற்றும் அவரது உறுப்பு ரிமை நீக்கப்பட்டு, கடந்த 13 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்த மானி அறிவித்தலை செல்லுபடி யற்ற தாக்குமாறு கோரி, தவிசாளர் எஸ். எச்.எம்.முஜாஹிரினால், நேற்று முன்தினம் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் ரிட் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது.குறித்த மனுவை நேற்று ஆராய்ந்த சோபித ராஜகருணா மற்றும் தம்மிக்க கனேபொல ஆகிய நீதிபதிகள் குழாம், இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. குறித்த மனு தொடர்பிலான விசாரணைகள் நிறைவடையும் வரை, இந்த உத்தரவு செல்லுபடியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தவிசாளர் முஜாஹிர் சார்பில், சட்டத்தரணிகளான என்.எம். ஷஹீட், ருஷ்தி ஹபீப் உள்ளிட்ட குழாமினர் வாதங்களை முன்வைத்திருந்தனர். மன்னார் பிரதேச சபையின் புதிய தவிசாளர் தெரிவு நேற்று இடம்பெறவிருந்த நிலையிலேயே, இந்த தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியா வடக்கு பகுதியில் தடுப்பூசி அட்டை பரிசீலனை

## தடுப்பூசி பெறாதவர்களுக்கு பி.சி.ஆர்!

வவுனியா, செப். 30

வவுனியா நெடுங்கேணிப் பகுதியில் நேற்று தடுப்பூசி அட்டைகள் பரிசோதிக்கப்பட்டு தடுப்பூசி பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு பி.சி.ஆர் மற்றும் அன்ரிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் வி.திலீபன் தலைமையில் , வவுனியா சுகாதார வைத்திய பணிமனை யினர், நெடுங்கேணி பொலிஸாருடன் இணைந்து நெடுங் கேணி நகரில் மக்களின் தடுப்பூசி செலுத்திய அட்டைகளை பரிசோதனை செய்தனர்.

குறித்த தரப்பினரின் பரிசோதனை நடவடிக்கையில் கொரோனா தடுப்பூசி பெற்றுக்கொள்ளாதவர்கள் கோவிட் 19 நோய்க்கான ஆபத்தை கூடுதலாக கொண்டிருப்பவர்கள் என அடையாளப்படுத்தி பி.சி.ஆர் மற்றும் அன்ரிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

# ஜீ.எல்.பீரிஸ்டன் வெள்ளியன்று ஐரோப்பிய ஒன்றிய குழு பேச்சு!

கொழும்பு, செப். 30

இலங்கைக்கு பயணம் மேற்கொண்டுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழு, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிசுடன் நாளை வெள்ளிக்கிழமை பேச்சு நடத்தவுள்ளது.

இதன்போது மனித உரிமை விவகாரம் மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பிலும், ஜி.எஸ்பி. பிளஸ் வரிச்சலுகை சம்பந்தமாகவும் விரிவாக கலந்துரையாடப்படவுள்ளது என தெரியவருகின்றது.

அதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுடன், ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் நேற்று முன் தினம் பேச்சு நடத்தியுள்ளனர். அத்துடன், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவை சந்தித் தும் கலந்துரையாடியுள்ளனர். (அ)

# கொரோனா வைரஸ் பரவலின் வீரியம்மிக்க காலம் முடிவுக்கு!

## பேராசிரியர் சந்திம ஜீவந்தர தகவல்



கொழும்பு,செப். 30

**கொரோனா வைரஸ் பரவலின் வீரியமிக்க காலகட்டம் நிறைவடைந்து வருவதாக ஸ்ரீஜெயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் மூலக்கூறு மற்றும் மரபணு ஆய்வுப் பிரிவின் பணிப்பாளர் பேராசிரியர் சந்திம ஜீவந்தர தெரிவித்தார்.**

அமெரிக்க ஆய்வொன்றின் அறிக்கையை மேற்கோள் காட்டி கருத்து வெளியிட்ட அவர், கொரோனா தொற்றின் மோசமான நிலைமை நிறைவடைந்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

கொரோனா தடுப்பூசியை பெற்றுக்கொள்வதன் ஊடாகவே கொரோனா பரவலை நிறைவுக்கு கொண்டுவர முடியுமெனவும் அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவது அனைவரினதும் கடமையாகும். எனவே தனிப்பட்ட ரீதியாக ஒவ்வொருவரும் சிந்தித்து தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள வேண்டியது கட்டாயமாகுமெனவும் அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# 1,300 கிலோ மஞ்சள் பாசையூரில் மீட்பு



யாழ்ப்பாணம், செப். 30

இந்தியாவில் இருந்து கடத்தி வரப்பட்ட சுமார் 1,300 கிலோ கிராம் மஞ்சள் பாசையூர் பகுதியில் வைத்து பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் இருந்து பாசையூர் பகுதிக்கு படகில் மஞ்சள் கடத்தி வரப்படுவதாக யாழ்ப்பாணப் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் குறித்த மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு மீட்கப்பட்ட மஞ்சளை சுங்க திணைக்களத்திடம் ஒப்படைக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதுடன், சம்பவம் தொடர்பில் விசாரணைகளையும் ஆரம்பித்துள்ளனர்.

# மஹிந்தானந்த பதவி துறக்கவேண்டும் ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து



கொழும்பு, செப். 30

அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே பதவி துறக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள்சக்தி வலியுறுத்தியுள்ளது.

வெளிநாட்டிலிருந்து அரிசி இறக்குமதி செய்வதற்கு ஒருபோதும் இடமளிக்கப்பட மாட்டாது எனவும், அவ்வாறு நடைபெற்றால் அமைச்சு பதவியை துறப்பேன் எனவும் விவசாய அமைச்சர் மஹிந்தா னந்த அளுத்கமகே சவால் விடுத்திருந்தார்.எனினும், தற்போது அரிசி இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இந்நிலையிலேயே தோல்வியை பொறுப்பேற்று பதவி விலகுமாறு மஹிந்தா னந்த அளுத்கமகேனக்கு பிர தான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது. (அ)

# இலங்கையில் 40வீத உயிரிழப்புகள் இருதய நோய்களால் ஏற்படுகின்றன

## யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி தெரிவிப்பு



யாழ்ப்பாணம், செப். 30

இலங்கையில் 40 வீதமான உயிரிழப்புக்கள் இருதய நோய்களினால் ஏற்படுகின்றது, இருதய நோய்க்கான ஆபத்தான காரணிகள் உடற் பாதிப்புக்களையும், உயிரிழப்புக்களையும் ஏற்படுத்துகின்றது.

இருதய நோய்களுக்கான பிரதான ஆபத்தான காரணியாக நீரிழிவு நோய் திகழ்கின்றது. இருதய நோய்களினால் ஏற்படும் இழப்புக்களில் 10 வீத அதிக குருதி குளுக்கோஸ் நிலமையினால் ஏற்படுகின்றது என்று யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் இருதய நுண்ணார் சுருக்க நடுக்க நோய் தொடர்பான சர்வதேச ஆய்வு செயற்றிட்டத்தின் இலங்கைக்கான இணைப்பாளரும், யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதியுமான மருத்துவர் இ.சுரேந்திரகுமாரன் தெரிவித்தார்.

சர்வதேச இருதய நாளான நேற்று, ஐக்கிய இராச்சியத்தின் பேர்மிங்காம் பல்கலைக்கழகம், லிவர்பூல் பல்கலைக்கழகம் மற்றும் இலங்கையின் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் கூட்டிணைப்பில் ஐக்கிய இராச்சியத்தின் தேசிய சுகாதார ஆய்வு நிறுவனத்தின் நிதிப் பங்களிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும், இருதய நுண்ணார் சுருக்க நடுக்க நோய் தொடர்பான சர்வதேச ஆய்வு செயற்றிட்டம் தொடர்பாக அறிவூட்டும் வகையில் ஊடக விபரிப்பு ஒன்று யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஊடகப் பிரிவினால் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.

இந்த ஊடக விபரிப்பின்போது, யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, யாழ். போதனா வைத்தியசாலை இருதய வைத்திய நிபுணர் வைத்தியக் கலாநிதி எம். குருபரன், யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட சமுதாய மருத்துவத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ். குமரன், யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மருத்துவத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளரும், நரம்பியல் விசேட வைத்திய நிபுணருமான மருத்துவர் கலாநிதி அ.அஜினி மற்றும் ஆய்வு மாணவர்களும் கலந்து கொண்டனர்.

இந்த ஊடக விபரிப்பில் குறிப்பிடப்பட்ட மருத்துவர் இ.சுரேந்திரகுமாரன் குறிப்பிட்ட விடங்கள் வருமாறு:

இலங்கையில் 40 வீதமான உயிரிழப்புக்கள் இருதய நோய்களினால் ஏற்படுகின்றது, இருதய நோய்க்கான ஆபத்தான காரணிகள் உடற் பாதிப்புக்களையும், உயிரிழப்புக்களையும் ஏற்படுத்துகின்றது. இருதய நோய்களுக்கான பிரதான ஆபத்தான காரணியாக நீரிழிவு நோய் திகழ்கின்றது. இருதய நோய்களினால் ஏற்படும் இழப்புக்களில் 10 வீத அதிக குருதி குளுக்கோஸ் நிலமையினால் ஏற்படுகின்றது. இந்த நோய் நிலமைகளை சீராக முகாமைத்துவம் செய்வதற்காக உள்ள தரவுகளை சேகரிப்பதற்கான திட்டம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இருதய நோய்கள் மற்றும் நீரிழிவு தொடர்பான ஆய்வுகளைத் திட்டமிடுவதற்காக ஐக்கிய இராச்சியத்தின் பேர்மிங்காம் பல்கலைக்கழகம், லிவர்பூல் பல்கலைக்கழகம் மற்றும் இலங்கையின் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை சேர்ந்த கல்வியலாளர்களைக் கொண்ட குழுவொன்று உருவாக்கப்பட்டுள்ளது. இதன் முதற் கட்டமாக இருதய நுண்ணார் சுருக்க நடுக்க நோய் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்படுகின்றது. ஐக்கிய இராச்சியத்தின் தேசிய சுகாதார ஆய்வு நிறுவனம் 80 மில்லியன் இலங்கை ரூபாயை இவ் ஆய்வுக்காக பங்களிப்புச் செய்துள்ளதுடன் மேலும் பல நிதிவாய்ப்புக்களை உருவாக்கித்தந்துள்ளது. இருதய நுண்ணார் சுருக்க நடுக்க நோய் எனப்படுவது ஒழுங்கற்ற இதய சந்தத்தினால் ஏற்படுகின்ற பாதிப்பாகும். இது இரத்தத்தில் கட்டிகள் தோன்றுவதற்கு வழிகோலுவதன் மூலமாக பாரிசவாதம், இருதய செயலிழப்பு மற்றும் இதயம் தொடர்பான மேலதிக நோய் நிலைமைகளை உருவாக்குகின்றது. இந்நோயின் உருவாக்கமானது வயது வந்தோரிடையே அதிகமாகக் காண்படுகிறது. முதியவர்களின் எண்ணிக்கை எமது சமூகத்திலே அதிகரித்து வரும் நிலையில் இந்நோயின் சமூகப் பரம்பலைக் கண்டறிவது மிகவும் அவசியமானது. இருதய நுண்ணார் சுருக்க நடுக்க நோயானது மிகவும் பாரதுரமான பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடியதாக இருப்பினும் இதனுடைய சமூக ரீதியிலான பரம்பலை இலங்கை போன்ற நடுத்தர வருமானம் மற்றும் குறைந்த வருமானம் பெறும் நாடுகளிலே மிகச் சிறிதளவே அறியப்பட்டுள்ளது. அண்மையில் ஏற்படுத்தப்பட்ட பாரிசவாதம் தொடர்பான தேசியப் பதிவேடானது குறிப்பிடத்தக்களவு வீதமான பாரிசவாதமானது இருதய சுருக்க நடுக்க நோயினால் ஏற்படுவதாக குறிப்பிடுகின்றது.

இவ்வாய்வானது இலங்கையின் வடமாகாணத்தில் 10,000 பேரை உள்ளடக்கிய குடித்தொகையில் மேற்கொள்ளப்படும் சமூக மட்டத்திலான ஆய்வின் ஊடாக இருதய நுண்ணார் சுருக்க நடுக்க நோயினுடைய பரவலைக் கண்டறிவதை முதலாவது படிநிலையாக கொண்டுள்ளது. இதில் உலகத்தரம் வாய்ந்த தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி இந்நோய்க்கான ஆபத்துக் காரணிகளையும் அத்தோடு நோயாளர்கள் தமக்குரிய மருத்துவ சேவைகளியை பெற்றுக் கொள்வதனையும் குறிப்பாக அதனுடைய தரத்தினையும் ஆராயவுள்ளோம்.

சமூக மட்டத்திலான ஆய்வின் முதற் கட்டமாக 9,253 பங்கேற்பாளர்களிடமிருந்து கோவிட் பெருந்தொற்றின் மத்தியிலும் வெற்றிகரமாக தரவு சேகரிக்கப்பட்டுள்ளது. இதன் இரண்டாவது கட்டமாக தற்போது உடல் சார் அளவீடுகளையும் உயிரியல் மாதிரிகளையும் சேகரிக்கவுள்ளோம். சமூக கணக்கெடுப்பின் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பங்கேற்பாளர்களுக்கு உதவி செய்யும் முகமாக Nat Intensive Care Surveillance-Mahidol-Oxford Research Unit (NICS – MORU) எனும் நிறுவனத்தின் உதவியுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சமூதாய குடும்ப நலப் பிரிவினால் இலவச தொலைபேசிச் உதவிச் சேவை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வுதவிச் சேவையின் நோக்கம் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட உடல் நல ஆரோக்கியத்தைப் பேணுவதும் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுமாகும்.

இவ்வாய்வானது தரவுகளை அடிப்படையாகக் கொண்ட மருத்துவ நடைமுறைகளை நீண்டகால ஆய்வுகளின் ஊடாக உருவாக்கும் நிலையமொன்றினை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் உருவாக்குவதினை நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ்வாய்வானது கலாசார ரீதியாக மற்றும் பொருளாதார ரீதியாக ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதாக காணப்படுகின்றது. இவ்வாய்வினை வினைத்திறனுடனும் சமூகத்திற்கு பயனுள்ள வகையில் மேற்கொள்வதற்கு சகல தரப்பினரதும் ஆய்வாளர்களினதும் ஆதரவினை வேண்டி நிற்கின்றோம் என்றுள்ளது. (அ-3)

**“பாவனைப் பொருட்களைப் பதுக்கி வைப்பதும், பதுக்கி வைத்து செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி விலைகளை அதிகரிப்பதும் தண்டனைக்குரிய குற்றமாகும். அதுமட்டுமின்றிப் பொது மக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் அவசரகாலச் சட்டத்தின் கீழ் பதுக்கப்பட்ட பொருட்களைப் பறிமுதல் செய்யவும் முடியும். நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தண்டப் பணம் விதிக்கவும் முடியும்.**




# வலுப்படும் இராணுவ மயமும் நிறைவேறாத எதிர்பார்ப்புகளும்

நா.யோகேந்திரநாதன்

நாட்டில் அத்தியாவசியப் பொருட்களான அரிசி, மா, சீனி, பால்மா, பருப்பு, கருவாடு போன்றவற்றின் விலைகள் கட்டுக்கடங்காமல் அதிகரித்துச் சென்ற நிலையில் மக்கள் நாளாந்த உணவுத் தேவையையே நிறைவேற்ற முடியாமல் திண்டாடும் நிலை ஏற்பட்டிருந்தது. அதேநேரத்தில் கொரோனாத் தாக்கமும், அதன் காரணமாக அமுல்படுத்தப்படும் தனிமைப்படுத்தும் ஊரடங்கும் மக்களின் தொழில் வாய்ப்புக்களை முடக்கி வருமான வழிகளை பாதிக்க வைத்த நிலையில் மக்கள் மேலும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை எழுந்தது.

இப்படியான ஒரு நிலையில் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் பதவி உருவாக்கப்பட்டுள்ளது. அத்தியாவசியப் பொருட்களின் விநியோகம், விற்பனை போன்ற சகல விடயங்களும் அவரின் அதிகாரத்திற்குள் கொண்டு வரப்பட்டதுடன் அந்த ஆணையாளராக உயர் மட்ட இராணுவ அதிகாரி நியமிக்கப்பட்டார். அடுத்த சில நாட்களில் அவசரகாலச் சட்டமும் பிரகடனப்படுத்தப்பட்டு அத்தியாவசிய சேவை ஆணையாளரின் அதிகாரங்கள் மேலும் வலுப்படுத்தப்பட்டன.

எனவே, அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தால் முழுமையாகப் பயன்படுத்தி இராணுவப் பாணியில் இறுக்கமான நடவடிக்கைகளை எடுத்து சட்டத்தை உதாசீனப்படுத்தி பதுக்கல், மோசடி, சிவப்பு நாடா நடவடிக்கைகள் போன்றவற்றில் ஈடுபடும் வர்த்தக முதலைகள் மீதும் அவர்களுக்குத் துணைபோகும் அதிகாரிகள், அரசியல்வாதிகள் ஆகியோரின் மீதும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பொருட்களின் விலைகள் கட்டுப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்பட்டது.

ஆரம்பத்தில் அப்படியான ஒரு தோற்றப்பாடு தென்பட்டதை மறுப்பதற்கில்லை.

கொழும்பு, கம்பஹா ஆகிய மாவட்டங்களிலும் வேறு சில நகரங்களிலும் பதுக்கி வைக்கப்பட்ட பெருந்தொகைச் சீனி நுகர்வோர் அதிகார சபையினால் கைப்பற்றப்பட்டது. அதுமட்டுமின்றி துறைமுகத்தில் தடுத்துவைக்கப்பட்ட பெருந்தொகையான சீனி வரியில்லாமலே எடுத்துச் செல்ல இறக்குமதியாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. அவ்வகையில் கைப்பற்றப்பட்ட பல்லாயிரம் தொன் சீனி இலங்கையின் பல மாதத் தேவைக்கும் போதுமானதெனக் கூறப்பட்டது.

பாவனைப் பொருட்களைப் பதுக்கி வைப்பதும், பதுக்கி வைத்து செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி விலைகளை அதிகரிப்பதும் தண்டனைக்குரிய குற்றமாகும். அதுமட்டுமின்றிப் பொது மக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் அவசர காலச் சட்டத்தின் கீழ் பதுக்கப்பட்ட பொருட்களைப் பறிமுதல் செய்யவும் முடியும். நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தண்டப் பணம் விதிக்கவும் முடியும்.

ஆனால் அரசாங்கம் கைப்பற்றப்பட்ட பதுக்கி வைக்கப்பட்டிருந்த சீனிக்கு 1 கிலோவுக்கு 110 ரூபாய்படி பணம் வழங்கியுள்ளது. இதில் சீனி வரி 80 ரூபாவிலிருந்து 25 சதமாகக் குறைக்கப்பட்டிருந்தபோது இறக்குமதி செய்யப்பட்ட ஓர் இலட்சத்து 40 ஆயிரம் தொன் சீனியும் அடங்குமெனவும் அது கிலோ 84 ரூபாய்க்கு விற்கப்படமுடியுமெனவும் கூறப்படுகின்றது. ஆனால் அரசாங்கம் கைப்பற்றப்பட்ட சீனி அனைத்தையும் 110 ரூபாய் விலை கொடுத்து வாங்கியுள்ளது.

இப்படியான நடைமுறைகள் மூலம் பதுக்கல், செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தல் என்பவற்றைக் கட்டுப்படுத்த முடியுமா என்ற கேள்வி எழுகிறது. அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகமாக ஒரு இராணுவ உயரதிகாரி நியமிக்கப்பட்டு, அவசர காலச் சட்ட விதிகள் பிரகடனப்படுத்தப்பட்ட போதிலும் வர்த்தக முதலைகளுக்கு ஏன் இப்படி மோசடிகளுக்கு ஆசீர்வாதம் வழங்கப்படுகிறது என்பது புரிந்து கொள்ளப்படமுடியாதுள்ளது.

இங்கு சிவில் நிர்வாகம் இராணுவ மயப்படுத்தப்பட்டமை வர்த்த முதலைகளின் நலன்களைப் பாதுகாக்கவா அல்லது மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றவா என்ற சந்தேகம் மக்களுக்கு எழுவதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை.

கைப்பற்றப்பட்ட சீனி ச.தோ.ச. மூலமும் தனியார் விற்பனை நிலையங்களிலும் ரூ. 114 க்கு விற்கப்படுமெனவும் கூறப்பட்டது.

ச.தொ.ச. நிறுவனங்களில் கொரோனா தொற்று நிலையிலும் நீண்ட வரிசைகளைக் காணமுடிகிறது. எனினும் சிலர் சீனி கிடைக்காமல் திரும்பிச் செல்கின்றனர்.

ச.தொ.ச. நகரப் புறங்களில் மட்டுமே இயங்குகின்றன. ஏனைய வியாபார நிலையங்கள், குறிப்பாக மலையகப் பகுதிகள் என்பனவற்றில் விலை குறையவேயில்லை. வர்த்தகர்கள் தாம் வாங்கிய விலைக்கேற்ற வகையிலேயே விற்க முடியுமெனத் தெரிவிக்கின்றனர்.

தற்சமயம் கார்கில்ஸ், கீல்ஸ் நிறுவனங்கள் மூலமும் விற்கப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. அந்த நிறுவனங்கள் பெரு நகரங்களில் மட்டுமே உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களில் கைப்பற்றப்பட்ட சீனி புறக்கோட்டை மொத்த விற்பனை நிலையங்கள் மூலமாக விநியோகிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இத்தொகையில் ஒரு பகுதி பதுக்கல்காரர்களின் கைகளுக்குப் போகாது என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை.

தற்சமயம் நாட்டில் 17 மாதங்களுக்கான சீனி கையிருப்பில் உள்ளதாகக் கூறப்படுகிறது. அப்படியானால் மக்களுக்கு கட்டுப்பாட்டு விலைக்கு போதியளவு வழங்க்கப்படாமைக்கு யார் காரணம்? விநியோகம் திட்டமிட்டமுறையில் குழப்பப்படுகிறதா? அதை ஏன் சரிசெய்ய முடியவில்லை.

அதேவேளையில் வடமத்திய மாகாணத்திலும் அம்பாறையில் பதுக்கி வைக்கப்பட்ட ஏராளமான நெல்லு, அரிசி என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. அம்பாறையில் கைப்பற்ற நெல்லு சாராய உற்பத்திக்காகப் பதுக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

இது சம்பந்தமாக கருத்து வெளியிட்ட நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சு லக்ஷ்மன் அழகியவன்ன மில் உரிமையாளர்கள் கட்டுப்பாட்டு விலைக்க விற்கச் சம்மதம் தெரிவித்தாகத் தெரிவித்துள்ளார். இந்தக் கட்டுப்பாட்டு விலையைத் தீர்மானிப்பது யார் என்பது தான் இப்போ எழும் கேள்வியாகும். 3 மாதங்களின் முன்பு 85 ரூபாய் விற்கப்பட்ட அரிசி தற்சமயம் 150 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஆனால் வர்த்தகர்கள் விவசாயிகளிடமிருந்து ஒரு கிலோ நெல்லை 50 ரூபாய்க்கே கொள்முதல் செய்தனர் என்பது முக்கிய விடயமாகும். இன்னொருபுறம் பிறிமா நிறுவனம் கோதுமை மாவின் விலையைப் 12 ரூபாயால் அதிகரித்துள்ளது. ஆனால் அமைச்சர் இறக்குமதியாளர்கள் மா விலையை அதிகரிக்கப் போவதில்லை என வாக்களித்திருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

எப்படியிருப்பினும் அத்தியாவசிய பொருட்களின் விநியோகம், விற்பனை பெரும் வர்த்தக முதலைகளின் கையில் இருக்கும் வரை விலையுர்வைக் கட்டுப்படுத்துவது சாத்தியமாயிருக்கப் போவதில்லை. அரசாங்கத்திலுள்ள தீர்மானிக்கும் சக்திகளுக்கும் பெரும் வர்த்தக முதலைகளுக்குமிடையே ஒரு புரிந்துணர்வு உள்ளதாகவே எதிர்க்கட்சியினர் குற்றம் சாட்டுவதை நம்பத்தான் வேண்டும் போலுள்ளது.

அடிப்படையில் இராணுவமயம் மூலம் ஊழல், மோசடி, பதுக்கல், போதைப் பொருள் வர்த்தகம் என்பன கட்டுப்படுத்தப்படுமெனவும், கொரோனாவின் முதலாவது அலை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டதைப் போன்று அடுத்த அலைகளும் கட்டுப்படுத்தப்படுமெனவும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் கட்டுக்குள் கொண்டு வரப்படுமெனவும் போக்குவரத்து சுமுகமான நிலைக்குக் கொண்டு வரப்படுமெனவும் மக்கள் கொண்டிருந்த எந்தவொரு எதிர்பார்ப்புமும் நிறைவேற்றப்படவில்லை. மாறாக பயங்கரக் குற்றம் புரிந்தவர்கள் பொது மன்னிப்பில் விடுவிக்கப்பட்டதுடன், கடத்தல், கொலை வழக்குகளும் வாபஸ் பெறப்பட்டன. மக்களே, அரச பணியாளர்களோ தங்கள் உரிமைகளுக்கோ, அநீதிகளுக்கெதிராகக் குரல் கொடுக்கவோ, போராட்டங்கள் நடத்தவோ முடியாமல் அவசரகாலச் சட்டம் அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது.

மேலும் பல வர்த்தக முதலைகள் தமக்கு அரசாங்கம் நிர்ணயித்த விலையில் விற்பதானால் நட்டம் ஏற்படுவதாகச் சொல்லி இறக்குமதிகளை நிறுத்துகிறார்கள். அதன்மூலம் பொருட்கள் தட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டு கறுப்புச் சந்தையில் விற்கப்படுகின்றது. இராணுவ நடவடிக்கை மூலம் அப்பதுக்கல்கலுக்கு எதிரான நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்படுவதை நியாயப்படுத்தி அமைச்சர்கள் கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

இராணுவ மயம் மூலமும் அவசர காலச் சட்ட மூலமும் மக்களுக்குப் பயனுள்ள நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. வர்த்தக முதலைகளுக்கான வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளதுடன் மக்கள் தங்கள் பிரச்னைகளுக்காக போராட்டங்கள் நடத்துவதற்கு எதிரான ஒடுக்குமுறைகளும் தொடர்கின்றன. எனவே, இராணுவ மயத்தின் தீமைகளை மட்டுமே முகம் கொடுக்குமளவுக்கு மக்களின் எதிர்பார்ப்புகள் முறியடிக்கப்பட்டுள்ளன என்பதும் ஊழல், மோசடிகாரர்களுக்கும் பதுக்கல் பேர்வழிகளுக்கும் வாய்ப்புகள் உருவாகியிருப்பதுமே நடைமுறை உண்மையாகும்.

- அருவி

# என்னதான் நடக்கிறது ஆப்கானிஸ்தானில்?



# பழிவாங்க துடிக்கும் தலிபான்கள் 220 பெண் நீதிபதிகள் தலைமறைவு!

**கிளாயர் ப்ரெஸ்**

ஆப்கானிஸ்தானில் பெண்ணுரிமையின் முன்னோடிகள் அவர்கள். நீதியின் காவலர்களாக, மிகவும் விளிம்பு நிலையில் இருப்பவர்களுக்கும் நியாயம் தேடித்தந்தவர்கள். ஆனால் இப்போது ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த சுமார் 200 பெண் நீதிபதிகள் தலிபான் ஆட்சியின்கீழ் தண்டனைக்கு பயந்து தலைமறைவாகியிருக்கிறார்கள். ஆப்கானிஸ்தானில் ஆறு இரகசிய இடங்களிலிருந்து பெண் நீதிபதிகள் பி.பி.சியிடம் பேசினார்கள். பாதுகாப்புக் கருதி அவர்களின் பெயர்கள் மாற்றப்பட்டிருக்கின்றன.

பாலியல் வன்புணர்வு, கொலை, சித்ரவதை போன்ற பெண்களுக்கு எதிரான வன்முறைச் செயல்களுக்காக் நூற்றுக்கும் மேற்பட்ட ஆண்களுக்கு எதிராகக் குற்றத்தீர்ப்பு வழங்கியிருக்கிறார் நீதிபதி மசூமா. ஆனால் அவர் வாழும் நகரம் தலிபான்களால் கைப்பற்றப்பட்டு, ஆயிரக்கணக்கான குற்றவாளிகள் சிறை யிலிருந்து விடுவிக்கப்பட்ட சில நாட் களிலேயே அவருக்குக் கொலை மிரட் டல்கள் வரத் தொடங்கின. அவரது அலைபேசிக்குக் குறுஞ்செய்திகளும் குரல் செய்திகளும் தெரியாத எண்களிலிருந்து அழைப்புகளும் வந்தபடியே இருந்தன.

“தலிபான்கள் சிறையில் இருந்த எல்லாரையும் விடுவித்து விட்டார்கள் என்று ஒரு நள்ளிரவில் கேள்விப்பட்டோம். உடனே வீட்டை விட்டு வெளியேறினோம்” என்கிறார் மசூமா.

“நான் நகரத்துக்கு வெளியில் போக காரில் பயணித்தபோது புர்கா அனிந்துகொண்டேன், அப் போதுதான் யாரும் என்னை அடையாளம் கண்டுபிடிக்காமல் இருப்பார்கள். எல்லா தலிபான் சோத னைச் சாவடிகளையும் அதிர்ஷ்டவச மாகக் கடந்துவிட்டோம்” என்கிறார்.

அவர் கிளம்பிய சிறிது நேரத்திலேயே அவரின் வீட்டுக்குத் தலிபான்கள் வந்ததாக அண்டை வீட்டாரிடமிருந்து மசூமாவுக்கு செய்தி வந்தது. அவர்களைப் பற்றி விவரித்ததை வைத்தே, அவர்கள் யார் என்பதை மசூமா அறிந்துகொண்டார்.

தலிபான்கள் ஆட்சியைப் பிடிப்பதற்குப் பல மாதங்களுக்கு முன்பு, தலிபானைச் சேர்ந்த ஒருவர், தனது மனைவியைக் கொடூரமாகக் கொன்றதாகக் குற்றம்சாட்டப்பட்ட வழக்கை மசூமா விசாரித்தார். குற்றம் நிரூபிக்கப்பட்டதால் அவருக்கு 20 ஆண்டுகள் சிறை தண்டனை வழங்கி மசூமா தீர்ப்பளித்தார்.

“அந்த இளம் பெண்ணின் உடல் அடிக்கடி என் மனதுக்குள் வந்து போகும். அது ஒரு கொடூரமான குற்றம். வழக்கு முடிந்தபிறகு என் அருகில் வந்த அந்தக் குற்றவாளி, “நான் வெளியில் வந்தபிறகு, என் மனைவிக்கு என்ன செய்தேனோ அதையே உனக்கும் செய்வேன்,” என்றார். அப்போது நான் அதைப் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால் தலிபான்கள் அதிகாரத்தைக் கைப்பற்றியபிறகு அவரிடமிருந்து பலமுறை அழைப்பு வந்துவிட்டது, நீதிமன்றத்திலிருந்து என்னைப் பற்றிய எல்லா தகவல்களையும் சேகரித்துவிட்டதாகக் கூறுகிறார். “உன்னைத் தேடிப்பிடித்துப் பழி தீர்ப்பேன்” என்று மிரட்டுகிறார்” என்கிறார் மசூமா.

ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த 220 பெண் நீதிபதிகள் தலைமறைவாக இருப்பதாக புலனாய்வில் தெரிய வந்துள்ளது. தலிபானைச் சேர்ந்தவர்களை இவர்கள் தீர்ப்பு வழங்கி சிறைக்கு அனுப்பியதால் இப்போது அவர்களுக்குக் கொலை மிரட்டல் வந்திருக்கிறது. அதில் நான்கு நீதிபதிகள் மனைவியைக் கொன்றதற்காக தலிபான் உறுப்பினர்களை சிறைக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

கொலை மிரட்டல் வந்த பிறகு ஆறு பேரும் ஒரு முறையாவது அலைபேசி எண்ணை மாற்றியிருக்கிறார்கள். எல்லாரும் தலைமறைவாக இருக்கிறார்கள், சில நாட்களுக்கு ஒரு முறை இடம் மாறுகிறார்கள். ஆறு பேரின் வீட்டிற்கும் தலிபான் உறுப்பினர்கள் வந்து சென்றிருக்கிறார்கள், அண்டை வீட்டாரிடமும் நண்பர்களைப் பற்றியும் விசாரித்திருக்கிறார்கள்.

நன்கு படித்திருந்த இந்தப் பெண் நீதிபதிகள், தங்கள் குடும்பத்தினருக்காக உழைப்பவர்களாகவும் இருந்தனர். ஆனால், இப்போது அவர்களின் ஊதியம் நிறுத்தப்பட்டு வங்கிக் கணக்குகள் முடக் கப்பட்ட நிலையில், உறவினர்களை நம்பியிருக்கும் நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுவிட்டனர்.

முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறை வழக்குகளை நீதிபதி சனா விசாரித்துவந்தார். தனது பெரும்பாலான வழக்குகளில் குற்றம்சாட்டப் பட்டவர்கள் தலிபான் அல்லது ஐசிஸ் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் என்கிறார்.

“முன்னாள் சிறைவாசிகளிடமிருந்து இதுவரை 20 கொலை மிரட்டல்கள் வந்துவிட்டன” என்கிறார். பன்னிரெண்டுக்கும் மேற்பட்ட தனது குடும்ப உறுப்பினர்களோடு இவர் தலைமறைவாக வசித்து வருகிறார். ஒரே ஒருமுறை இவரின் குடும்பத்தைச் சேர்ந்த ஆண் உறுப்பினர் இவர்களது வீட்டிற்குச் சென்றிருக்கிறார். துணிகளை அவர் எடுத்து வைத்துக்கொண்டிருந்தபோது, ஆயுதம் ஏந்த தலிபான்கள் வந்து இறங்கினர்.

“கதவைத் திறந்தேன். இதுதான் நீதிபதியின் வீடா என்று கேட்டனர். அவள் எங்கே என்று தெரியவில்லை என்று நான் சொன்னதும் என்னை மாடிப்படியில் தூக்கி வீசினர். துப்பாக்கியின் மறுமுனையால் என்னை ஒருவர் அடித்தார். என்னை எல்லாரும் சேர்ந்து அடித்ததில் மூக்கு வாய் எல்லாம் ரத்தமாகிவிட்டது” என்று அந்த நிகழ்வை அவர் விவரிக்கிறார்.

தலிபான்கள் கிளம்பிய பிறகு அவர் மருத்துவமனைக்குச் சென்றிருக்கிறார். “இன்னொரு உறவினரிடம் நீதிபதியான என் சகோதரி இருக்கும் இடத்தை மாற்றிக்கொண்டே இருக்கவேண்டும் என்று கூறினேன். எங்களுக்கு வேறு வழியே இல்லை. வேறு நாட்டுக்கும் தப்பிச் செல்ல முடியாது, பாகிஸ்தானுக்குக் கூட” என்கிறார்

“நான் என் நாட்டுக்கு சேவை செய்ய விரும்பினேன், அதனால்தான் நீதிபதியானேன்” என்கிறார் பாதுகாப்பான இடத்தில் தங்கியிருக்கும் அஸ்மா. “குடும்ப நல நீதிமன்றத்தில், தலிபான் உறுப்பினர்களிடமிருந்து மணவிலக்கு கேட்கும் பெண்களின் வழக்குகளை அதிகமாக விசாரித்திருக்கிறேன். அது பெரிய அச்சுறுத்தலாக இருந்தது. ஒருமுறை தலிபான்கள் நீதிமன்றத்தின் மீது ஓர் ஏவுகணையைக் கூட ஏவி விட்டார்கள். நெருங்கிய நண்பரும் நீதிபதியுமான ஒரு பெண், வேலை முடிந்து வீட்டிற்குச் செல்லும்போது காணாமல் போனார். பிறகு அவரது உடல்தான் கிடைத்தது” என்கிறார். அவரைக் கொலை செய்ததற்காக யார் மீதும் குற்றம்சாட்டப்படவில்லை, அப்போது இருந்த தலிபான் தலைவர்கள் தங்களுக்கும் இதற்கும் தொடர்பில்லை என்று மறுத்துவிட்டார்கள்.

இப்போதைய ஆப்கானிஸ்தானின் புதிய தலைமை பெண்ணுரிமை தொடர்பான விஷயங்களை எப்படிக் கையாளும் என்று இன்னும் தெரியவில்லை. ஆனால், இதுவரை நடந்த சம்பவங்கள் கவலைக்குரியவையாக இருக்கின்றன.

தற்காலிக அரசின் அமைச்சரவையில் அறிவிக்கப்படுள்ள எல்லா உறுப்பினர்களும் ஆண்களே. பெண்கள் சம்பந்தப்பட்ட விஷயங்களை கவனிக்க யாரும் நியமிக்கப்படவில்லை. கல்வி அமைச்சகம், மாணவர்களையும் ஆண் ஆசிரியர்களையும் திரும்பப் பள்ளிக்குச் செல்லுமாறு உத்தரவிட்டுள்ளது. மாணவிகள் மற்றும் ஆசிரியைகள் பற்றி எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

எதிர்காலத்தில் பெண் நீதிபதிகளுக்கு இடம் இருக்குமா என்று இப்போதைக்கு சொல்ல முடியாது என்கிறார் தலிபானைச் சேர்ந்த கரீமி. ”பெண்களுக்கான வேலை வாய்ப்பு மற்றும் வேலைச்சூழல் பற்றி இன்னும் விவாதித்துக்கொண்டிருக்கிறோம்” என்கிறார்.

இதுவரை ஒரு இலட்சம் பேர் நாட்டிலிருந்து வெளியேறியிருக்கிறார்கள், ஆறு நீதிபதிகளும் வெளியேற வழி தேடிக்கொண்டிருப்பதாகத் தெரிவிக்கிறார்கள். ஆனால் அவர்களிடம் போதுமான பணம் இல்லை என்பதும் எல்லா உறவினர்களிடமும் கடவுச்சீட்டு கிடையாது என்பதும் தடையாக இருக்கிறது.

இப்போது பிரிட்டனில் வசித்துவரும் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த முன்னாள் பெண் நீதிபதி மார்சியா பாபாகார்கில், எல்லா பெண் நீதிபதிகளும் ஆப்கானிஸ்தானிலிருந்து மீட்கப்படவேண்டும் என்று தெரிவித்திருக்கிறார். தலைநகரமான காபூலில் இருந்து வெகு தொலைவில் கிராமங்களில் வசிப்பவர்களையும் நாம் மறந்துவிடக்கூடாது என்கிறார்.

“கிராமங்களில் இருக்கிற சில நீதிபதிகள் என்னை அழைப்பார்கள் - மார்சியா, நாங்கள் என்ன செய்வது, எங்கு போவது? வெகு விரைவில் இறந்துவிடுவோம் என்பார்கள். எனக்கு மிகவும் வேதனையாக இருக்கும். இவர்களில் பெரும்பாலானோருக்கு கடவுச்சீட்டு கிடையாது. நாட்டை விட்டு வெளியேற சரியான ஆவணங்களும் கிடையாது, ஆனால் அவர்களும் ஆபத்தில் இருக்கிறார்கள், அவர்களை மறக்கவோ கைவிடவோ முடியாது” என்கிறார் மார்சியா.

நியூசிலாந்து, பிரிட்டன் உள்ளிட்ட பல நாடுகள் ஆதரவு தருவதாக அறிவித்திருக்கின்றன. ஆனால் இந்த உதவி எப்போது வரும், எத்தனை நீதிபதிகளுக்கு உதவும் என்பதெல்லாம் இன்னும் உறுதி செய்யப்படவில்லை. இந்த உதவி தேவையான நேரத்தில் வராது என்று நீதிபதி மசூமா அஞ்சுகிறார்.

“நாங்கள் செய்த குற்றம்தான் என்ன? படித்திருக்கிறோம் என்பதா? குற்றவாளிகளுக்கு தண்டனை கொடுத்து பெண்களுக்கு உதவினோம் என்பதா? எது என் குற்றம் என்று அடிக்கடி யோசிப்பேன். என் தாய்நாட்டை நேசிக்கிறேன். ஆனால் இப்போது நான் சிறையில் இருப்பதாக உணர்கிறேன். எங்களிடம் பணம் இல்லை, வீட்டை விட்டு வெளியேற முடிவதில்லை. மற்ற குழந்தைகளிடம் ஏன் பேசக்கூடாது, ஏன் வெளியில் விளையாடக் கூடாது என்று கேட்கும் என் மகனிடம் என்ன சொல்வது என்று தெரியவில்லை. ஏற்கனவே அவன் மன உளைச்சலில் இருக்கிறான். சுதந்திரமாக இருக்கும் நாள் வருவதற்காகப் பிரார்த்திக்கிறேன். என்னால் முடிந்தது அவ்வளவுதான்” என்கிறார்.

**- பி.பி.சி.**

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - I, II நேரம் : 1 மணித்தியாலம்

கல்வி tv CHANNEL

**04) கீழே தரப்பட்டுள்ள சொற்றொடருக்குரிய தனிச்சொல்லை எழுதுக.**

i. தேர்தல் ஒன்றில் போட்டியிடுபவன். ..............................

ii. எழுபத்தைந்தாவது ஆண்டில் எடுக்கப்படும் விழா. ..............................

iii. வழக்கைத் தாக்கல் செய்பவன். ..............................

(3 x 1 = 03 புள்ளிகள்)

**05) பின்வரும் ஆங்கிலச் சொற்கள் ஒவ்வொன்றிலும் ஓர் எழுத்து விடுபட்டுள்ளது. அவ்வெழுத்தை வெற்றிடத்தில் எழுதுக.**

i. Plan.......ain ii. Ma.......ket

(2 x 1= 02 புள்ளிகள்)

**06) பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.**

i. Please open your book :- ..............................

ii. I am watering the plants :- ..............................

(2 x 1= 02 புள்ளிகள்)

**07) பின்வரும் வாக்கியத்தின் கருத்தினை ஆங்கிலத்திற்கு மாற்றி ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**

நான் பாட வேண்டும்.

..............................

(02 புள்ளிகள்)

**08) பின்வரும் சொற்கள் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

i. புகையிரத நிலையம் :- ..............................

ii. மயில் :- ..............................

(2 x 1= 02 புள்ளிகள்)

**09) பின்வரும் வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக.**

i. சத்து வத்த(ட்)ட யமு(Dh)த?

..............................

ii. உட பனின்ன

..............................

(2 x 1 = 02 புள்ளிகள்)

✧ **10 தொடக்கம் 12 வரையுள்ள வினாக்களில் இருக்கும் வெற்றிடங்களை நிரப்புக.**

10) இப் பாடலின் நான்காவது வரியைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

"கன்றை நினைந்தே உள்ளம்
கசியும் பசுவைப் போல
நன்றி புரிந்தோர் தம்மை
.............................."

11) "மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் - மன்னற்குத்........."

இப்பாடலில் யாருடைய சிறப்புக் கூறப்படுகிறது?

..............................

12) "காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்" என்னும் திருக்குறளைப் பூர்த்தி செய்க.

..............................

(3 x 1 = 03 புள்ளிகள்)

**13) வெற்றிடத்துக்குப் பொருத்தமான சரியான விடையை அடைப்புக்களிலிருந்து தெரிவு செய்து எழுதுக.**

i. இலங்கை சார்பாக ஒலிம்பிக் போட்டியில் முதன்முதலில் பதக்கம் வென்றவர் .............................. ஆவார்.
(சுசந்திகா ஜெயசிங்க, டங்கன்வைட், எதிர்வீரசிங்கம்)

ii. கணினியின் .............................. மனிதனுடைய மூளைக்கு ஒப்பானதொரு பகுதியாகும்.
(சுட்டி, மையச்செயலகம், கணினித்திரை)

iii. .............................. ஆம் ஆண்டில் இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் எல்லே விளையாட்டும் ஒரு நிகழ்ச்சியாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டது.
( 1968, 1978, 1986)

(3 x 1 = 03 புள்ளிகள்)

14) இன்று பெருகிவரும் வாகன உபயோகத்தால் வாகன விபத்துக்கள் அதிகரித்த வண்ணம் செல்கின்றன. இதனைக் கருத்திற் கொண்டு நாம் செயற்பட வேண்டியது எமது கடமையாகும். **'வீதி விதிகளைக் கடைப்பிடித்து விபத்துக்களைத் தவிர்ப்போம்'** எனும் தலைப்பில் ஆறு சொற்களுக்குக் குறையாமல் எழுவாய், பயனிலைத் தொடர்புகளுடன் மூன்று வாக்கியங்கள் எழுதுக.

i. ..............................
..............................


ii. ..............................
..............................

iii. ..............................
..............................

(3 x 2 = 06 புள்ளிகள்)

**15) தரப்பட்டுள்ள எண்குறியை எண்பெயரில் எழுதுக.**

71 010 - ..............................

16) 

i. இவ்வலங்கார வளைவில் ஆரம்பத்தில் கட்டப்பட்டிருந்த பலூன்களின் எண்ணிக்கையை உரோமன் எண்ணில் தருக.

..............................

ii. தற்பொழுது நல்ல நிலையிலுள்ள பலூன்களின் எண்ணிக்கையை உரோமன் எண்ணில் ஆக்குவதற்குத் தேவையான தீக்குச்சிகள் எத்தனை?

..............................

**17) அடுத்து வரும் எண்களைத் தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் எழுதுக.**

9 16 25 36 49 ........ ........

**18) இலக்கம் 3, ⊕ என்னும் குறியீட்டினாலும்**

**இலக்கம் 1, ○ என்னும் குறியீட்டினாலும்,**

**இலக்கம் 9, △ என்னும் குறியீட்டினாலும் குறிக்கப்படுமெனில் இதன் பெறுமானத்தை எழுதுக.**

△○ × △ ÷ ⊕ = ......................

# அரசின் வினைத்திறனற்ற செயல்களால் பெரும் பொருளாதார நெருக்கடியில் நாடு

## ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு



கொழும்பு, செப். 30

**"இலங்கையின் தற்போதைய அரசு சர்வதேச ரீதியாக நாட்டைச் சரியாகக் கையாளாத காரணத்தால் தற்போது அதிகளவான தொழிற்சாலைகள் மூடப்படும் நிலைமைக்கு வந்துள்ளன. நாடு வரலாறு காணாத பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளப் போகின்றது."**

**- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் முன்னாள் அமைச்சருமான வஜிர அபேவர்தன தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"அரசு முன்னெடுத்து வரும் வினைத்திறனற்ற செயற்பாடுகள் காரணமாக நாடு மீண்டும் வரிசையில் நிற்கும் யுகத்தை நோக்கித் தள்ளப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல், ஆகஸ்ட் மாதங்களில் நாடு பொருளாதார ரீதியாக பாரிய நெருக்கடி நிலைமைக்கு உள்ளாகி மக்கள் கடும் கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியேற்படும்.

வரலாற்றில் வினைதிறனற்ற, பலவீனமான அரசுகள் ஆட்சியில் இருந்த அனைத்து சந்தர்ப்பங்களிலும் நாடு பொருளாதார ரீதியாக அழிவைச் சந்தித்தது. அப்படியான அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஐக்கிய தேசியக் கட்சியே நாட்டை மீண்டும் கட்டியெழுப்பியது" - என்றார். (இ)

# பிரதேச சபை தவிசாளர் கொரோனாவால் மரணம்!

கொழும்பு, செப். 30

கொடிகாவத்தை - முல்லேரியா பிரதேச சபையின் தவிசாளர் ரங்கஜீவ ஜயசிங்க கொரோனாத் தொற்றால் உயிரிழந்தார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர் தனது 55 ஆவது வயதில் உயிரிந்தார்.

கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்த இவருக்கு, மீளவும் தொற்று உறுதியானதையடுத்து கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்று உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (இ)

# பொல்லால் தாக்கி பெண் கொலை!

கண்டி, செப். 30

பொல்லால் தாக்கப்பட்டு பெண்ணொருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கண்டி மாவட்டம், பல்லேகல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

61 வயது பெண்ணே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

நபர் ஒருவர் குறித்த பெண்ணின் தலையில் பொல்லால் தாக்குதல் மேற்கொண்டுள்ளார்.

சந்தேகநபருக்கும் குறித்த பெண்ணுக்கும் இடையில் நீண்ட நாட்களாக இடம்பெற்று வந்த முறுகல் நிலையே இந்தக் கொலைக்குக் காரணம் என்று தெரிய வந்துள்ளது.

இந்தக் கொலையுடன் தொடர்புடைய நபரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# மலையக மக்கள் முன்னணியில் இருந்து வெளியேறியவர்கள் மீள இணையலாம்!

## இராதாகிருஷ்ணன் எம்.பி. அழைப்பு

நுவரெலியா, செப். 30

"பல்வேறு காரணங்களால் மலையக மக்கள் முன்னணியில் இருந்து வெளியேறியவர்கள் தங்களுடைய தவறை உணர்ந்து மீண்டும் கட்சியுடன் இணைந்து செயல்பட முடியும்."

- இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் அழைப்பு விடுத்துள்ளார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

"மலையக மக்கள் முன்னணியின் மத்திய குழுக் கூட்டம் எனது தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கட்சியின் செயலாளர் நாயகமும் பேராசிரியருமான சங்கரன் விஜயசந்திரன், மலையக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் ஏ.லோரன்ஸ், மலையக தொழிலாளர் முன்



னணியின் நிதிச் செயலாளர் புஸ்பா விஸ்வநாதன் உட்பட உயர்பீட உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

இதன்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார கொரோனா நிலைமை தொடர்பாகவும் அரசியல் நிலைமை தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

முடக்க நிலை விடுபடுகின்ற சந்தர்ப்பத்தில் எங்களுடைய இளைஞர், யுவதிகள் மீண்டும் எவ்வாறு தங்களுடைய வேலைத்தளங்களுக்குச் செல்வது, அதன்போது அவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்னைகளை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பாகவும், பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தோட்டக் கம்பனிகளால் தொடர்ந்தும் பழிவாங்கப்பட்டு வருவது தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டதுடன் இதற்கு எவ்வாறு தீர்வைப் பெற்றுக் கொடுப்பது என்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இதன்போதே மலையக மக்கள் முன்னணியில் கடந்த காலங்களில் பல்வேறு காரணங்களால் வெளியில் சென்றவர்கள் தங்களுடைய தவறுகளை உணர்ந்து மீண்டும் கட்சியில் இணைந்து செயல்பட முடியும் என்பதை அனைத்து மத்திய குழு உறுப்பினர்களும் ஏகமனதாகத் தீர்மானித்ததுடன் அவ்வாறான ஒரு நிலையில் கட்சி எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது தொடர்பிலும் தீர்மானிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக கட்சியின் கொள்கையுடன் இணைந்து செயற்பட விரும்புகின்றவர்கள் இதற்கென அமைக்கப்பட்டுள்ள குழுவுடன் தொடர்பு கொண்டு மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும்" - என்றார். (இ)

# எஸ்.ரி.எவ். வேட்டையில் 18 பேர் வசமாக சிக்கினர்



கொழும்பு, செப். 30

நாடளாவிய ரீதியில் விசேட அதிரடிப் படையினர் மேற் கொண்ட பல்வேறு சுற்றி வளைப்புகளில் 18 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக 6 மதுபான சுற்றிவளைப்புகளில் 7 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் 276.75 லீற்றர் மதுபானமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்துடன் 281.25 லீற்றர் கோடாவும் கைப்பற்றப்பட்டுள்ளது.

மேலும், ஒரு எரிவாயு சிலிண்டர், ஒரு எரிவாயு அடுப்பு, ஒரு செப்புத்தகடு என்பவற்றையும் விசேட அதிரடிப் படையினர் கைப்பற்றியுள்ளனர்.

இதேவேளை, நவகமுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திஸ்ஸரன பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் துப்பாக்கி ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த துப்பாக்கியைப் பயன்படுத்தி வந்தவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

ராகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பேரலந்த பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் தீர்வையின்றி இந்நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட 220 புகைத்தல் பொருட்களுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கந்தான பிர தேசத்தைச் சேர்ந்த 58 வயது நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கெசல்வத்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட யோன் வீதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 12 ஆயிரம் புகைத்தல் பொருட்களுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கொழும்பு - 12 பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதுடைய நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஹபராதுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிஹிரிபெனன்ன, தல்பே பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் தீர்வை வரியின்றி இந்நாட்டுக்குக் கொண்டு வரப்பட்ட 400 புகைத்தல் பொருட்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தல்பே பிரதேசத்தைச் சேர்ந்த 54 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டுள்ளார்.

தனமல்வில, மஹவெள பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட 8 சுற்றிவளைப்புகளில் காடழிப்பில் ஈடுபட்ட எண்மர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். தனமல்வில பிரதேசத்தைச் சேர்ந்த 19 தொடக்கம் 56 வரையான வயதுடையவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர். (இ)

# வீட்டில் எரிகாயங்களுடன் பெண்ணின் சடலம் மீட்பு!

பசறை, செப். 30

பசறை எல்ல பொலிஸ் பிரிவுக்குட் பட்ட பகுதியிலுள்ள வீடொன்றில், பெண்ணொருவர் எரிகாயங்களுக்குள்ளான நிலையில் மரணமடைந்தார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பசறை வீதி, எல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 74 வயதுடைய பெண்ணே இவ்வாறு மரணமடைந்தார்.

இது தொடர்பில் பிரதேச மக்கள் வழங்கிய தகவலுக்கு அமைவாக குறித்த இடத்துக்குச் சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# மேலும் 770 பேர் பூரண குணமடைவு

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து மேலும் 770 பேர் குணமடைந்துள்ளனர். சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் விஞ்ஞானப் பிரிவு நேற்று வெளியிட்டுள்ள நாளாந்த புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது. கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 4 இலட்சத்து 56 ஆயிரத்து 587 ஆக அதிகரித்துள்ளது. (இ)



## ஈகுவடோரில் சிறை கலவரம்: 24 கைதிகள் பலி; 48பேர் காயம்!

கித்தோ, செப். 30

ஈகுவடோர் நாட்டில் சிறைக் கைதிகளிடையே ஏற்பட்ட மோதலில் 24 பேர் உயிரிழந்தனர். மேலும் 48 பேர் காயமடைந்தனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

தென்னமெரிக்காவின் ஈகுவடோர் நாட்டின் குயாக்வாலி நகரிலுள்ள சிறையில் நேற்று முன்தினம் இந்தக் கலவரம் இடம்பெற்றுள்ளது. இந்த சிறையில் கொலை, கொள்ளை, போதைப்பொருள் கடத்தல் போன்ற மோசமான குற்றங்களில் ஈடுபட்ட குற்றவாளிகள் அடைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களிடையே ஏற்பட்ட குழு மோதல் கலவரமாக மாறியது. இதன்போது கைதிகள் துப்பாக்கியால் சுட்டும் கத்தியால் குத்தியும், வெடிகுண்டுகளை வீசியும் தாக்குதல்களை நடத்தியுள்ளனர். இதிலேயே 24 கைதிகள் இறக்க, 48 பேர் காயமடைந்தனர்.

இதைத் தொடர்ந்து அங்கு இராணுவத்தினர் குவிக்கப்பட்டு மோதல் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

கடந்த பெப்ரவரி மாதமும் இந்த நாட்டில் 4 சிறைச்சாலைகளில் இடம்பெற்ற கைதிகள் மோதலில் 79 கைதிகள் இறந்தனர். சிறைக் காவலர்கள் உட்பட 20 பேர் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 30 வருடமாக பேசுகிறீர்கள் ஆனால் பலன்தான் என்ன?

### உலக நாடுகளின் தலைவர்களை விளாசினார் கிரேட்டா துன்பர்க்




மிலன், செப். 30

30 ஆண்டுகளாக பேசிக் கொண்டே இருக்கிறீர்கள் ஆனால், பலன் என்ன? இவ்வாறு உலக நாடுகளின் தலைவர்களிடம் கேள்வி எழுப்பியுள்ளார் கிரெட்டா துன்பர்க்.

இத்தாலியின் மிலன் நகரில் "யூத் போர் க்ளைமேட்" (Youth4Climate) காலநிலை மாற்றத்துக்கான இளைஞர்கள் என்ற தலைப்பில் மாநாடு நடைபெற்றது.

இதில் உலகம் முழுவதுமிருந்து 190 நாடுகளை சேர்ந்த 400 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இதில் கிரெட்டா துன்பர்கும் கலந்து கொண்டார். சுவீடனை சேர்ந்த கிரெட்டா துன்பெர்க் என்ற 16 வயது சிறுமி காலநிலை மாற்றத்திலிருந்து புவியை காக்க தனிநபராக போராட தொடங்கி உலகம் முழுவதும் பிரசாரம் மேற்கொண்டு வருகிறார்.

இந்த மாநாட்டில் பேசிய கிரெட்டா, "உலகம் முழுவதுமிருந்து என்னை போன்ற இளைஞர்களை உலக தலைவர்கள் தெரிவு செய்து அழைத்துவந்து இது போன்ற மாநாட்டை நடத்துகின்றனர். ஆனால், இதில் நாங்கள் பேசுவதை அவர்கள் செவிமடுக்கிறார்களா? என்றால் இல்லை. எங்கள் குரல்களுக்கு செவிசாய்ப்பது போல் நடிக்கிறார்கள்.

இங்கே ஒரே ஒரு பூமிதான் இருக்கிறது. "பிளானட் பி" எல்லாம் இங்கே இல்லை. இதைத்தான் நாம் சரி செய்யவேண்டும். ஆனால், இப்போது இருப்பதுபோல் பேசிவிட்டு மட்டுமே இருந்தால் எதுவும் நடக்காது. 30 ஆண்டுகளாக உலகத் தலைவர்கள் பேசிக் கொண்டே இருக்கிறார்கள். பலன் என்ன? அவர்களின் பேச்சுகள் நம்பிக்கை அளிக்கின்றன. ஆனால், வெறும் நம்பிக்கை மட்டுமே போதாதே. அவர்களின் வாக்குறுதிகள் எல்லாம் வெற்று வாக்குறுதிகளாக இருக்கின்றன என்றார்.

இதேபோல், அமெரிக்காவைச் சேர்ந்த ஆவாஸ் என்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த ஒஸ்கார் சோரியா கூறுகையில், பணம் தான் எல்லாம். பணக்கார நாடுகள் 2020 முதல் 2024 வரையிலான காலகட்டத்தில் 50 ஆயிரம் கோடி டொலர் - சுமார் 100 இலட்சம் கோடி இலங்கை ரூபாயை காலநிலை மாற்ற பிரச்னைகளுக்கான தீர்வுக்காக செலவழிக்க வேண்டும். இல்லாவிட்டால், இது போன்ற மாநாடுகளை நடத்தி நேரத்தை விரயமாக்க வேண்டாம் என்றார்.

உகாண்டாவைச் சேர்ந்த வெனேசா நகாட்டா கூறுகையில், பெரும் பணக்கார நாடுகள் ஆண்டுக்கு 10 ஆயிரம் கோடி டொலர் - 2 இலட்சம் கோடி இலங்கை ரூபாய் ஒதுக்கி எந்தெந்த நாடுகள் காலநிலை மாற்றத்துக்கு அதிக காரணமாக இருக்கின்றனவோ அவற்றில் எல்லாம் பழமையான எரிபொருள் பயன்பாட்டில் இருந்து சுத்தமான எரிபொருள் பயன்பாட்டை 2020இற்குள் கொண்டு வருவோம் என உறுதியளித்தது. 2020 முடிந்துவிட்டது. ஆனால் நாங்கள் இன்னமும் காத்திருக்கிறோம் - என்றார். (ஐ)

## 70 ஆண்டின்பின் 'பேஸ்புக்'கால் தாயுடன் இணைந்த முதிய மகன்



டாக்கா, செப். 30

பேஸ்புக்கில் பதிவேற்றிய காணொலி மூலம் 70 ஆண்டுகளின் பின்னர் தனது தாயாருடன் இணைந்துள்ளார் பங்களாதேஷை சேர்ந்த முதியவர் ஒருவர்.

அப்துல் குத்தூஸ் என்ற அந்த முதியவர் 10 வயதாக இருந்த போது வீட்டை விட்டு வெளியேறியுள்ளார். வேறொரு ஊருக்கு சென்ற அவர் ஆதரவற்ற நிலையில் வீதியில் திரிந்துள்ளார். அவரை ராஜ்ஸஹி என்ற ஊரிலிருந்த இரு சகோதரிகள் தத்தெடுத்து வளர்த்தனர்.

பின்னர் அப்துல் குத்தூஸ் திருமணம் செய்து 2 மகன்களுக்கும், 5 மகள்களுக்கும் தந்தையானார். தற்போது முதுமையை எட்டிவிட்ட அவர் தனது தாய், தந்தை, சொந்த ஊர் நினைவால் வாடியுள்ளார்.

இந்த நிலையில், பேஸ்புக்கில் காணொலி ஒன்றை அவர் பதிவிட்டார். அதில், தான் தனது குடும்பத்தினரை சந்திக்க விரும்புகிறார் என்றும், தனது ஊர் பிரம்மன்பாரியா மற்றும் பெற்றோரின் பெயரையும் கூறியுள்ளார்.

இந்நிலையில் குத்தூஸின் காணொலியை பார்த்த அவரின் சொந்த ஊரை சேர்ந்த நபர் ஒருவர் குத்தூஸை தொடர்பு கொண்டு அனைத்து விவரங்களையும் கூறினார். குத்தூஸின் தாயார் மங்கோலா நெஸ்ஸா இன்னும் உயிருடன் இருப்பதையும், அவர் தனது 100 வயதை நெருங்கிக் கொண்டிருுப்பதையும் அந்த நபர் தெரிவித்தார்.

இதனால், குத்தூஸ் தனது சொந்த ஊருக்குப் புறப்பட்டார். 70 ஆண்டுகளுக்குப் பின்னர் அவர் தனது தாயை சந்தித்தார். அவரின் தாயார் மகனின் நெற்றியில் இருந்த தழும்பை சரிபார்த்து அவரது அடையாளத்தை உறுதி செய்தார். தாயும், மகனும் 70 ஆண்டுகளுக்குப் பின்னர் இணைந்த நெகிழ்ச்சியான நிகழ்வைக் காண ஏராளமானோர் திரண்டனர்.

குத்தூஸ் தனது தாயின் கரங்களை இறுகப் பற்றிக் கொண்டு, "அம்மா, நான் வந்து விட்டேன். நீங்கள் எதற்கும் கவலைப்படாதீர்கள்", என்று கூற ஒட்டுமொத்த கிராமமுமே சில நிமிடங்கள் உணர்ச்சி வெள்ளத்தில் மூழ்கியது. (ஐ)

## அமெரிக்கா அத்துமீறல் தலிபான்கள் எச்சரிக்கை

காபூல், செப். 30

அமெரிக்காவின் ஆளில்லா விமானங்களை ஆப்கானிஸ்தான் வான்வெளியில் பறக்கவிடுவதை அமெரிக்கா நிறுத்த வேண்டும். இல்லையேல் மோசமான விளைவுகள் ஏற்படும் என்று தலிபான்கள் நேற்று புதன்கிழமை எச்சரித்துள்ளனர்.



ஆப்கானிஸ்தான் வான்வெளியில் ஆளில்லா விமானங்களை பறக்கவிடுவதன் மூலம் சர்வதேச சட்டங்கள் மற்றும் டோஹா, கட்டார் பேச்சுக்களின் போது வழங்கிய வாக்குறுதிகளை அமெரிக்கா மீறுகின்றது என்று தலிபான்கள் அறிக்கை மூலம் தெரிவித்துள்ளனர்.

சர்வதேச விதிகளின் கீழ் ஆப்கானிஸ்தானை புனரமைப்புக்கு வெளிப்படையான உதவ முன்வருமாறு அமெரிக்கா உள்ளிட்ட அனைத்து நாடுகளையும் நாங்கள் அழைக்கிறோம் எனவும் தலிபான்கள் அறிவித்துள்ளனர்.

இதேவேளை, தலிபான்களின் இந்த எச்சரிக்கை குறித்து அமெரிக்க தரப்பில் இருந்து இதுவரை எந்தக் கருத்துக்களும் வெளியிடப்படவில்லை. (ஐ)

## ஒலியை விஞ்சும் ஏவுகணை பரிசோதித்தது வடகொரியா!

பியொங்யொங், செப். 30

ஒலியை விடவும் 5 மடங்கு அல்லது அதற்கு மேற்பட்ட வேகத்தில் பயணிக்கும் புதிய ஹைபர்சொனிக் ஏவுகணையை வெற்றிகரமாக பரிசோதித்ததாக வடகொரியா அறிவித்துள்ளது.

வடகொரியா அதன் கிழக்கு கடலோரத்திலிருந்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அதிகாலை சோதனை நடத்தியதாக தென்கொரியா தெரிவித்திருந்தது. இந்த ஏவுகணை கிழக்கு கடலில் வீழ்ந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. எனினும், இந்த ஏவுகணை குறித்து தெளிவான விளக்கம் எதுவும் வெளியாகியிருக்கவில்லை.

இந்த நிலையிலேயே 'க்வாசாங் -8' என்ற இந்த ஹைபர்சொனிக் ஏவுகணையை பரிசோதித்ததாகவும். இது ஒலியை விட 5 மடங்கு வேகத்தில் செல்ல வல்லது என்றும் வடகொரியா தெரிவித்துள்ளது.

வடகொரியாமீது பொருளாதார தடை நீடித்து வரும் நிலையில் அந்த நாட்டின் ஆயுத வளர்ச்சி மற்றொரு முக்கிய அறிகுறியாக அமைந்துள்ளது என்று கருதப்படுகின்றது. உலகில் இது வரை, அமெரிக்கா, ரஷ்யா, சீனா, இந்தியா ஆகிய நாடுகளே ஹைபர் சொனிக் ஏவுகணைகளை வெற்றிகரமாக பரிசோதித்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கடலுடன் சேரும் எரிமலை குழம்பு; ஆபத்தான வாயு வெளியேறலாம்!

### புவியியல் நிபுணர்கள் எச்சரிக்கை

மட்ரிட், செப். 30

ஸ்பெயினின் கும்ப்ரே வீஜா எரிமலை கக்கும் நெருப்பு குழம்பு ஆறாக ஓடி அத்திலாந்திக் கடலில் நேற்று முன்தினம் மாலை முதல் சேர்கிறது. இதனால், ஆபத்தான வாயுக்கள் வெளியேறலாம் என்று புவியியல் ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.

ஸ்பெயின் நாட்டில் வடமேற்கு ஆபிரிக்க கடற்கரையையொட்டி அமைந்துள்ள கேனரி தீவுகளில் லா பால்மா எரிமலை அமைந்துள்ளது. இந்த எரிமலை கடந்த 19ஆம் திகதி நெருப்புக் குழம்பை கக்க ஆரம்பித்தது. எரிமலை வெடிக்க முன்னர் மக்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டமையால் உயிர் சேதம் ஏற்படவில்லை. எனினும், 500இற்கும் அதிகமான வீடுகள் சேதமடைந்துள்ளன.

இந்த நிலையில் கும்ப்ரே வீஜா எரிமலை குழம்பு ஆறுபோன்று ஓடி நேற்று முன்தினம் மாலை அத்திலாந்திக் பெருங்கடலில் கலந்தது. இதன்போது எழும்பிய புகை மூட்டம் வானில் நீண்ட தூரம் வரை பரவியது. இதனால், ஆபத்தான வாயுக்கள் காற்றில் பரவ வாய்ப்புள்ளது என்பதால் அந்த பகுதிக்கு பொது மக்கள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# “ஐ. பி. எல்லில் இதுவே டோனியின் இறுதி தொடர்”

சிட்னி, செப். 30

நடப்பு தொடருடன் டோனி ஐ. பி. எல். தொடரிலிருந்து ஓய்வு பெற வாய்ப்புள்ளது என்று அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் பிராட் ஹொக் தெரிவித்துள்ளார்.

டோனியின் ஓய்வுகுறித்து பல்வேறு செய்திகள் வெளியாகின. ஆனால், அவற்றை சென்னை அணியினர் மறுத்து வருகின்றனர். இந்த நிலையிலேயே அவுஸ்திரேலியாவின் முன்னாள் வீரர் பிராட் ஹொக் தனது யூ - ரியூப் சனலில், இந்தத் தொடருடன் டோனி ஓய்வு பெற்றுவிடுவார் என்று கருதுகிறேன்.

டோனிக்கு இந்த ஆண்டு ஐ. பி. எல். தொடர் அணித் தலைவராகவும் வீரராகவும் கடைசி தொடராக இருக்கும். டோனி தனது துடுப்பாட்ட திறமையை இழந்து விட்டார். இதனால் சென்னை அணியிலிருந்து அவர் ஒதுங்கி விடலாம். 2022ஆம் ஆண்டுக்கான பெரிய ஏலம் நடைபெறவுள்ளது. டோனியை அணியிலிருந்து நிறுத்தினால் பெருந்தொகை ஒன்று சென்னை அணிக்கு கிடைக்கும். அதன் பின்னர் அவரை வேறு வகையில் சென்னை பயன்படுத்தும்.

இதனால், இந்தத் தொடருடன் டோனி ஐ. பி. எல். தொடரில் ஓய்வை அறிவிக்கலாம். இந்திய கிரிக்கெட், சென்னை அணியின் வளர்ச்சிக்கு டோனியின் தலைமைப் பண்பு மிகவும் நல்லது. ரவீந்திர ஜடேஜா அணியில் வளர்வதற்கும், இளம் வீரர்களை மேம்படுத்துவதற்கும் டோனி உதவி செய்கிறார்.

இருபது - 20 உலகக்கிண்ண போட்டியில் இந்திய அணிக்கு ஆலோசகராக டோனி நியமிக்கப்பட்டமை வரவேற்கக்கூடியது. டோனிக்கு வழங்கப்பட்ட இந்தப் பதவி சென்னை அணியில் அவரை நிர்வாக ரீதியான பதவிக்கு வரவேற்கும். அல்லது சென்னை அணியின் தலைமை பயிற்றுவிப்பாளராக உயர்த்தும் - என்றார். (ஐ)



# எல். பி. எல். தொடரிலிருந்து யாழ்ப்பாண அணி விலகல்!

கொழும்பு, செப். 30

எல். பி. எல். தொடரின் முதலாவது சம்பியனான யாழ்ப் பாணம் (யெவ்னா) ஸ்ராலியன்ஸ் அணியின் உரிமையாளர்கள் தமது உரிமத்திலிருந்து விலகிக் கொண்டனர்.

வெளிப்படைத் தன்மை, நம்பகத் தன்மை இன்மையால் தொடர்ந்து செயல்பட முடியாமல் போனதாக யாழ்ப்பாணம் ஸ்ராலியன்ஸ் அணி உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

எல். பி. எல். என்றழைக்கப்படும் லங்கா பிறீமியர் லீக் தொடரை கடந்த வருடம் இலங்கை கிரிக் கெட் சபை நடத்தியது. இந்தப் போட்டியில் சம்பியன் பட்டத்தை யாழ்ப்பாணம் அணி கைப்பற்றி யிருந்தது. இந்த வருடத்துக்கான எல். பி. எல். போட்டி எதிர்வரும் டிசம்பர் மாதம் நடக்கவிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், யாழ்ப்பாணம் ஸ்ராலியன்ஸ் அணியை ஐரோப் பாவை மையமாகக் கொண்டு இயங்கும் இலங்கை தமிழர் ஒருவர் வாங்கினார் என்று தகவல்கள் வெளியாகியிருந்தன. இந்த நிலை யிலேயே யாழ்ப்பாணம் ஸ்ராலியன்ஸ் அணி உரிமையாளர்கள் விலகியுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் தமது முகநூலில் இட்ட பதிவில், “இது ஒரு கவலை தரும் செய்தியாகும். எமது பணியை மீண்டும் செயல் உருவாக்குவதற்கு நாங்கள் எங்களால் ஆன அதிகபட்ச முயற்சி யில் ஈடுபட்டோம். ஆனால், அது சாத்தியப்படவில்லை. சுருங்கச் சொல்லின் இப்படி ஒரு முடிவுக்கு வருவோம் என நாங்கள் நிச்சயமாக எண்ணவில்லை“

“யாழ்ப்பாணத்தை நேசிப்பதா லும் இலங்கையில் எமது பணி அர்த்தம் மிக்கதாக அமைய வேண் டும் என்பதாலும் எமது உரிமைத்து வப் பணியை தொடர்வதில் நாங்கள் உறுதியாக இருந்தோம். ஆனால், வெளிப்படைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மை இன்மை காரணமாக எங்களால் தொடர்ந்து செயல்பட இயலாமல் போனது. தற்போதைய அணிக்குப் பதிலாக வேறொரு அணியைப் பொறுப் பேற்குமாறு லீக்குடன் தொடர்பு பட்டவர்கள் வாய்மொழி மூலம் கோரியது உட்பட சில விசித்திர மான நிகழ்வுகள் சம்பவித்ததைத் தொடர்ந்தே இந்நிலை உருவானது.

இரசிகர்களே மன்னிக்கவும். நாங்கள் உங்கள் அனைவரையும் நேசிக்கின்றோம். அந்த (கடந்த) வருடம் மிகவும் இனிய பொழுது போக்காக அமைந்தது. இப் போதைய நிலையில் நாங்கள் இருப் பது மிகவும் துரதிர்ஷ்டமானது“ என்று கூறியுள்ளனர். (ஐ)



# இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை உலக கிண்ண உதைபந்தாட்டம்

## இன்றைய தினம் முக்கிய முடிவு

லண்டன், செப். 30

உலகக் கிண்ண உதைபந்தாட்ட தொடரை இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்துவது தொடர்பான யோசனை, போட்டி அட்டவணை தொடர்பான விடயங் கள் தொடர்பில் இறுதி முடிவு எடுப்பதற்காக இன்று முக்கிய கூட்டத்தை சர்வதேச உதைபந் தாட்ட சம்மேளனம் (பிபா) நடத்துகின்றது.

மெய்நிகர் வழியில் நடக்கும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்கு பிபாவில் அங்கம் வகிக்கும் சகல நாடுகளின் உதை பந்தாட்ட சம்மேளன நிர்வாகத்தினருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

உதைபந்தாட்ட நாட்காட்டியில் போட்டி களை மேலும் அதிகரிக்கச் செய்து மாற்றங் களை ஏற்படுத்த வேண்டுமென அநேகமான நாடுகள் எதிர்பார்த்துள்ளதாக குறிப்பிடப்படு கிறது.

இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு தடவை உலகக் கிண்ணம் நடத்தப்பட வேண்டும் என்ற விடயம் காலத்துக்குகாலம் கூறப்பட்டு வந்திருப்பினும் தற்போது இது தொடர்பி லான தனது பார்வையை பிபா மீண்டும் செலுத்தியுள்ளது. எனினும்,இவ்விடயம் தொடர்பில் எதிரான கருத்தை வெளியிட் டுள்ள ஐரோப்பிய கால்பந்தாட்ட சம்மேள னத்தின் தலைவர் அலெக்ஸாண்டர் செஃபரோன், இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு தடவை உலகக் கிண்ணத்தை நடத்துவது சரியான செயல்பாடல்ல எனவும், ஐரோப்பியர்கள் அதனை தடை செய்வதாகவும் கூறியிருந்தார்.

# இரு உலக கிண்ணங்களுக்கும் ரோஹித் தலைமையேற்கலாம்!

புதுடில்லி, செப். 30

அடுத்த இரு உலகக் கிண்ணப் போட்டிகளுக்கும் இந்திய அணிக்கு ரோஹித் சர்மாதான் தலைவராக இருக்க வேண்டும். கே. எல். ராகுல் அல்லது ரிஷப் பந்தை உப தலைவர்களாக நியமிக்கலாம் என்று இந்திய அணியின் முன்னாள் தலைவர் சுனில் கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

ஒக்ரோபரில் நடக்கும் இருபது - 20 உலகக் கிண்ணத் தொடரின் பின், விராட் கோலி தலைமை பதவியிலிருந்து விலகுகிறார். இந்த நிலையில், ரோஹித் சர்மா தலைவராக நியமிக்கப்படலாம் என்ற கருத்துக்கள் பரவலாக உள்ளன. இந்த நிலையிலேயே, இந்திய அணியின் முன்னாள் தலைவரான சுனில் கவாஸ்கர் தற்போது நடக்கவுள்ள உலகக் கிண்ணத் தொடருக்கும், அவுஸ்திரேலியாவில் அடுத்த ஆண்டு நடக்கவுள்ள இருபது - 20 தொடருக்கும் ரோஹித் சர்மா தலைவராக நியமிக்கப் படவேண்டும் என்று கூறியுள்ளார்.

ஸ்ரார் ஸ்போர்ட்ஸ் சனலில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றிலேயே அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார்.





# பஞ்சாப்பை வீழ்த்தியது மும்பை இந்தியன்ஸ்!

டுபாய், செப். 30

பஞ்சாப் கிங்ஸ் அணியை 6 விக்கெட்களால் வெற்றி கொண்டது மும்பை இந்தியன்ஸ். ஐ. பி. எல். தொடரின் இரண்டாவது பகுதி போட்டிகள் ஆரம்பமான பின்னர் மும்பை அணி பெற்றுக் கொண்ட முதல் வெற்றி இதுவாகும்.

டுபாயில் நேற்றுமுன் தினம் இரவு நடந்த 42ஆவது போட்டியில் ரோஹித் சர்மா தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியும் கே. எல். ராகுல் தலைமையிலான பஞ்சாப் கிங்ஸ் அணியும் மோதின.

போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற மும்பை களத்தடுப்பை தெரிவு செய்ய, பஞ்சாப் முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக் கப்பட்ட 20 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 135 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. இதில், எய்டன் மார்க்ரம் 42 (28 பந்துகளில்) ஓட்டங்களையும், தீபக் ஹூடா 28 (26) ஓட்டங் களையும் அதிகபடியாக பெற்றனர்.

136 என்ற இலகுவான வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மும்பை அணி, 19ஆவது ஓவரின் நிறைவில் 4 விக் கெட்களை இழந்து 137 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

பஞ்சாப் சார்பில், சௌரப் திவாரி 45 (37) ஓட்டங்களை யும், ஹார்த்திக் பாண்ட்யா 40 (30) ஓட்டங்களையும் அதிகபடியாக எடுத்தனர். (ஐ)

# தமிழின விடுதலை பயணத்துக்கான அடுத்தகட்டம் ஆக்கபூர்வமாக ஆரம்பம்

## தமிழ் எம்.பிக்களை ஒன்றிணைக்கும் முயற்சியை வரவேற்கின்றார் கூட்டமைப்பின் எம்.பி. சிறீதரன்

**கிளிநொச்சி,செப்.30**

**“தமிழ்த் தேசிய விடுதலைப் பயணத்தை அடுத்தகட்டம் நோக்கி எடுத்துச்செல்வதற்கான ஆரம்ப முன்முயற்சியை, திருமலை மறை மாவட்ட ஆயர், அதிவணக்கத்திற்குரிய கலாநிதி.கி.நோயல் இம்மானுவேலும் தென்கயிலை ஆதீனத்தின் முதற் குருமகா சந்நிதானம் தவத்திரு அகத்தியர் அடிகளாரும் இணைந்து முன்னெடுத்திருப்பது, போரின் நேரடித் தாக்கங்களால் கல்வி, கலை, கலாசார, மொழி, நில, இன அடையாள ரீதியாக கடுமையாக பாதிக்கப்பட்டு, வலி தாங்கி நிற்கும் தமிழினத்தின் ஆழ்மனக் காயங்களுக்கு அருமருந்தாய் அமைந்துள்ளது.”**

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-



“ஈழத் தமிழ்த் தேசிய இனம் சருகாக நெரிபட்டு, சிதிலம் சிதிலமாக சிதறுண்டு போய், நிர்க்கதியற்று அந்தரித்து நிற்க வேண்டுமென்றும், எமது வாழ்வியல் பரம்பரை இறைமையைப் பறித்தெடுக்க வேண்டுமென்றும், காலம் காலமாக எம் மீது இனவன்முறைகளைக் கட்டவிழ்த்துவிடும் பௌத்த - சிங்கள பேரினவாதம் கங்கணம் கட்டி நிற்கும் இந்தக் காலச்சூழலில், தமிழ்த் தேசிய இனம் ஒரு தலைமையின் கீழ் கட்டுப்படவோ, கூட்டுத் தலைமையொன்றின் கீழ் ஒன்றுபடவோ முடியாத கையறு நிலையில் மெல்லமெல்ல கூறுபடத் தொடங்கியுள்ளதை உணர்ந்து, காலத்தின் தேவையையும், இனத்தின் இருப்பை உறுதி செய்ய வேண்டிய இறுதி நிலையையும் கருதி ஈழத்தின் தலைநகரிலிருந்து இரு மதத் தலைவர்கள் இணைந்து முன்னெடுத்திருக்கும் ‘தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றிணைந்த கருத்தை சமூக இணைவுடன் வெளிப்படுத்தச் செய்யும் பொது முயற்சி’ ஆயுதப் போர் மௌனிக்கப்பட்டதன் பின்னர் தமிழ்த் தேசிய விடுதலை வரலாற்றில் முன்னெடுக்கப்பட்ட முயற்சிகளில் நம்பிக்கை தரும் புதியதோர் ஆரம்பமாகவே பார்க்கப்படுகின்றது.

தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் ஆக்கபூர்வமான மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ள இம்முயற்சியானது, அரசியல் ரீதியாக கருத்து முரண்பாடுகளைக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசிய இனத்தை ஒன்றிணைக்கும் முயற்சிகளில் முழுமூச்சாய் ஈடுபட்டு வரும் புலம்பெயர் தமிழ் சமூகப் பரப்பிலும் ஆரோக்கியமான தாக்கத்தை ஏற்படுத்துமென நம்புகின்றேன்.

தமது சொந்த மண்ணிலேயே அடிப்படை உரிமைகளற்ற, நசுக்கப்பட்ட இனமாக இருந்துகொண்டு தனது இருப்பைத் தக்கவைப்பதற்காய் எல்லா வழிகளிலும் போராடத் தலைப்பட்டுள்ள தமிழினத்தின் நிலையறிந்து, இன நலன் ஒன்றையே இலக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தப் பொது முயற்சி தடையின்றித் தொடர வாழ்த்தும் அதேவேளை ஈழத் தமிழ் மண்ணையும், மக்களையும் இதயசுத்தியோடு நேசிக்கும் தமிழ்த் தேசியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் காலக்கடமை உணர்ந்து இம்முயற்சியில் உரிமையோடு அணிசேர வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கின்றேன்” - என்றுள்ளது. (இ)

# நான்கு பிள்ளைகளின் தாயார் குளவி கொட்டி பரிதாப மரணம்

புத்தளம், செப். 30



புத்தளம் மாவட்டம், முந்தளம் பிரதேசத்தில் குளவிக்கொட்டுக்கு இலக்காகி பெண்ணொருவர் மரணமடைந்துள்ளார்.

கந்ததோடுவாவ கிராமத்தில் நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் நான்கு பிள்ளைகளின் தாய் (வயது 57) புத்தளம் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார் என்று முந்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

தென்னை மரத்தில் குளவிகள் கூடு கட்டியிருந்த நிலையில், கடுங்காற்று காரணமாக குளவிக்கூடு உடைந்து கீழே விழுந்துள்ளது.

இதன்போது பெரும் எண்ணிக்கையிலான குளவிகள் கலைந்து வந்து குறித்த பெண்ணைக் கொட்டியுள்ளது.

அவர் உடனடியாக மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார். (இ)

# மோ.சைக்கிள் - கார் நேருக்கு நேர் மோதி இளைஞர் பரிதாப மரணம்!

மட்டக்களப்பு, செப். 30

மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில் உள்ள கிரான் குளத்தில் கார் ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியதில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற ஒருவர் உயிரிழந்தார் என்று காத்தான் குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களுதாவளை, கடற்கரை வீதியைச் சேர்ந்த 21 வயதுடைய ரவீந்திரன் பிரசாத் என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தார்.

கல்முனையில் இருந்து மட்டக்களப்பை நோக்கிச் சென்ற காரும் மட்டக்களப்பிலிருந்து களுதாவளை நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளும் கிரான் குளம் வீதி வளைவு பகுதியில் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியதில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற இளைஞர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. காரைச் செலுத்திச் சென்றவரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளைக் காத்தான்குடிப் போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(இ)

# குடிபோதையில் சாரதியை தாக்கி ரவுடிகள் அராஜகம்

## 70 ஆயிரம் ரூபாய் பணமும் கொள்ளை

நுவரெலியா, செப். 30



நுவரெலியா மாவட்டம், பொகவந்தலாவை - ஹற்றன் பிரதான வீதியில் உள்ள டியன்சின் நகரில் வைத்து, குடிபோதையில் இளைஞர்கள் சிலர் சாரதி ஒருவர் மீது தாக்குதல் நடத்தியுள்ளதுடன், அவரது பையிலிருந்த 70 ஆயிரம் ரூபாய் பணத்தையும் பறித்துச் சென்றுள்ளனர்.

தாக்குதலில் படுகாயமடைந்த 27 வயதுடைய சாரதி பொகவந்தலாவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தோட்டப்புறங்களில் உள்ள வர்த்தக நிலையங்களுக்குப் பொருள்களை விநியோகிக்கச் சென்ற சாரதி மீதே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த சாரதி சம்பவம் தொடர்பில் பொகவந்தலாவை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதையடுத்து விசாரணைகளை மேற்கொண்ட பொகவந்தலாவைப் பொலிஸார், சம்பந்தப்பட்ட இளைஞர்களைக் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைதாகிய இளைஞர்கள் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் பல முறைப்பாடுகள் உள்ளன எனவும், டியன்சின் நகரில் இவர்கள் ரவுடிகளைப் போல் நடந்து கொண்டனர் எனவும் பாதிக்கப்பட்ட பலர் குற்றஞ்சாட்டியுள்ளனர். (இ)

# 14 தொழிலாளர்கள் வைத்தியசாலையில்



பதுளை, செப். 30

பதுளை மாவட்டம், ஹப்புத்தளை - தொட்டலாகலை தோட்டத்தில் நேற்றுப் பகல் குளவிக் கொட்டுக்கு உள்ளான நிலையில் 14 தொழிலாளர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தோட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

தேயிலை மலையில் கொழுந்துப் பறித்துக்கொண்டிருந்த தொழிலாளர்களே குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

அப்புத்தளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட தொழிலாளர்களில் இருவர் மேலதிக சிகிச்சைக்காக தியத் தலாவை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (இ)

# வவுனியாவில் மேலும் 41 பேருக்கு தொற்று

வவுனியா, செப். 30

வவுனியாவில் மேலும் 41 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதுடன் மேலும் ஒருவர் மரணமடைந்தார் எனவும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்ரிஜென் பரிசோதனைகளின் முடிவுகள் சில வெளியாகியுள்ளன.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிக்குளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கொரோனாத் தொற்று பரவல் அடைந்துள்ள நிலையில் 41 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களைக் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும் அவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மேலும், கொரோனாத் தொற்று காரணமாக வவுனியாவில் மேலும் ஒருவர் மரணமடைந்துள்ளனர். நெளுக்குளம் பகுதியைச் சேர்ந்த ஆண் (வயது 64) ஒருவரே இவ்வாறு மரணமடைந்தார்.

சடலத்தை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தகனம் செய்வதற்குரிய நடவடிக்கைகளைச் சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர். (இ)

## இறக்குமதி....

கப்ராலை அறிவுறுத் தியுள்ளார்.

அத்தியவசியமற்ற பொருள்கள் மற்றும் கருவிகளுக்கு இது வரை விதிக்கப்பட்டுள்ள இறக்குமதி கட்டுப் பாடுகள் காரணமாக வர்த்தகர்களும் பொதுமக்களும் எதிர்கொண்டுள்ள சிரமங்களை கருத்தில் கொண்டு பிரதமர் இவ்வாறு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

அதற்கமைய மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் இது தொடர்பில் தீர்வை முன்வைக்கவுள்ளார்.

## வடக்கில்...

உயிரிழந்த 6 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதன்படி, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த கிளிநொச்சி புன்னைநீராவியை சேர்ந்த எம். செல்வகுமரன் (வயது 45) என்பவர் உயிரிழந்தார். இதேபோன்று கிளிநொச்சி பொது மருத்துவமனையில் சடலம் ஒப்படைக்கப்பட்ட கந்தையா ஸ்ரீசுருணாகரன், செல்லதம்பி சிவக டாட்சம் (வயது 71) ஆகியோர் உயிரி ழந்தனர்.

வவுனியா பொது மருத்துவமனையில் எட்வேர்ட் ஜெகதீஸ்வரன் (வயது 66), நாகலிங்கம் தர்மபாலன் (வயது 69) என இருவர் உயிரிழந்தனர்.

இதேபோன்று முல்லைத்தீவு பொது மருத்துவமனையில் சடலம் ஒப்படைக் கப்பட்ட பழனிமுத்து கண்ணன் (வயது 79) என்பவரும் கொரோனா தொற்றால் உயிரிழந்தார். (ஐ)

## வடக்கில் 680...

தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்தில் வெளி மாவட்டங் களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு தனியான பேருந்து சேவையை வழங்க வும் அனுமதி பெறப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று மெய்நிகர் வழியில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே வடக்கு ஆளுநர் இந்தத் தகவல்களை தெரி வித்தார்.

மேலும், "கல்வி அமைச்சுக்கும் மாகாண ஆளுநர்களுக்கும் இடையே இடம்பெற்ற கூட்டத்தில் 200 மாணவர் களுக்கு உட்பட்ட தரம் ஒன்று தொடக் கம் தரம் 5 வரையான ஆரம்ப பாட சாலைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டது.

இதனடிப்படையில் வடக்கு மாகா ணத்தில் 200 மாணவர்களுக்கு உட்பட்ட 680 பாடசாலைகள் உள்ளன. அவற்றை உடனடியாக ஆரம்பிப்பதற்கான நடவ டிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மாகாணத்தில் வெளிமாவட்டங்களிலி ருந்து பயணிக்கும் ஆசிரியர்களுக்கு வசதியாக சிறப்பு பேருந்து சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. கல்வி அமைச்சரிடம் என்னால் முன்வைக்கப் பட்ட கோரிக்கைக்கு அமைய போக்கு வரத்து அமைச்சருடன் பேசி அதற்கான அனுமதி பெறப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆசிரியர்கள் சுகாதார நடைமுறை யின் கீழ் தமது பயணத்தை மேற்கொள்ள முடியும்.

ஆசிரியர்களுக்கு அவசர சுகாதார நட வடிக்கைகளுக்கு பயிற்சியளிக்க மாகாண சபையின் நிதியில் சுகாதாரத் திணைக் களத்தை முன்னெடுக்க என்னால் உத்தர விடப்பட்டுள்ளது. மேலும், ஒட்சி மீற்றர் உள்ளிட்ட சுகாதார உபகரணங்களை பெற்று ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் வழங்க அதிகாரிகளுக்கு பணித்துள்ளேன். அனைத்து ஒழுங்குகளும் முடிவடையும் நிலையில் இருப்பதால் ஆரம்ப பாட சாலைகள் திடீர் அறிவிப்புடன் ஆரம் பிக்கப்படும் - என்றார்.

## 941 பேருக்கு...

மடைந்துள்ளனர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 56 ஆயி ரத்து 587 ஆக உயர்வடைந்துள்ளது. (இ)

## மேலும்...

ஆயிரத்து 847ஆக அதிகரித் துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 61 பேரில் 36 பெண்களும் 25 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ளது.

இதில் 9 ஆண்கள், 5 பெண்கள் என 14 பேர் 30 - 59 வயதுக்கு இடைப்பட்ட வர்களாவர். 47 பேர் 60 வயதுக்கு மேற் பட்டவர்களாவர். இதில் 16 ஆண்களும், 31 பெண்களும் அடங்குகின்றனர். (இ)

## ரூ. 50,000 கோடி...

தெரிவித்துள்ளார். எரிசக்தி, கட்டுமா னம், உற்பத்தி மற்றும் கல்வி துறைகள் மூலம் இந்த முதலீடுகள் நாட்டுக்கு ஈர்க்கப்படும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

சீனாவில் வரும் நவம்பரில் இடம் பெறவுள்ள மிகப்பெரிய முதலீட்டு உச்சி மாநாடு நடைபெறவுள்ளது. இதில், சீன முதலீட்டாளர்களுக்கான முதலீட்டு வாய்ப்புகள் பற்றி அறிவுறுத்தப்படும். இதன்போது குறுகிய காலத்திற்குள் சீனா நேரடி முதலீடுகளை உறுதி செய்ய வாய்ப் பாகும். இதற்கான ஏற்பாடுகளில் சீன அபிவிருத்தி வங்கி இலங்கை தூதரகத் துடன் இணைந்து செயல்படுகின்றது.

சீனாவின் வுஹான் பல்கலைக்கழகம் அம்பாந்தோட்டையில் வேளாண் பல் கலைக்கழகத்தை உருவாக்க ஒப்புக் கொண்டதாக கூறப்படுகின்றது. இதற் காக 15 -20 கோடி டொலர் முதலீடு செய்யப்படும். அத்துடன், அங்கு கண் ணாடி உற்பத்தி தொழிற்சாலையும் உரு வாக்கப்படும். எங்களிடம் உலகின் சிறந்த குவார்ட்ஸ் சிலிக்கா உள்ளது. இதன்மூலம் சீன கண்ணாடி உற்பத்தியா ளர்களை ஈர்ப்பது நன்மை தரும்.

கொழும்பில் பொலிஸாருக்கு 25 ஆயிரம் வீடுகள் அமைத்தல், மன்னார், அம்பாந்தோட்டை, திருகோணமலை மற்றும் சியம்பலாண்டுவையில் சீன பவர் நிறுவனம் சூரிய மின் உற்பத்தி நிலையங் கள் அமைக்கும். இதேபோன்று சினோ பார்ம் நிறுவனத்தின் தடுப்பூசி நிரப்பும் தொழிற்சாலை, புதிய சீமெந்து உற்பத்தி தொழிற்சாலை, பஸ் வண்டிகளை பொருத்தும் தொழிற்சாலை என்பனவும் அமைக்கப்படவுள்ளன என்றும் அவர் கூறினார். (ஐ)

## முறையான...

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையி லேயே அவர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

நாட்டிலுள்ள மொத்த சனத் தொகையில் இதுவரையில் 53 சதவீதமா னோர் முழுமையாக தடுப்பூசிகளைப் பெற்று பாதுகாப்பு பெற்றுள்ளனர். 63.6 சதவீதமானோர் முதற்கட்ட தடுப்பூசி யைப் பெற்றுக் கொண்டுள்ளனர். ஆனால் இது மாத்திரம் போதுமான தல்ல. மீண்டுமொரு அபாய நிலைமை ஏற்படாமல் இருப்பதற்கு அடிப்படை சுகாதார விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டியது அத்தியாவசியமானதாகும்.

தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வது தனிநபர் உரிமை என்பதை ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால், இதில் சமூக உரிமையும் பொறுப்பும் உள்ளடங்கியுள் ளதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

எந்தவொரு நாடு எந்தவொரு தடுப் பூசியையும் தடை செய்யவில்லை. மாறாக குறித்த தடுப்பூசிகளைப் பெற்று தமது நாட்டுக்கு வருபவர்களுக்கு தனிமைப்படுத்தல் காலத்தில் சில சலுகைகளை வழங்குகின்றன.

எனவே, தடுப்பூசி எதுவாக இருந் தாலும் அதனைப் பெற்றுக் கொள்ள தயங்கவேண்டாம் என்று கேட்டுக் கொள்கின்றோம். முன்னரைப் போன்ற அபாய நிலை மீண்டும் ஏற்பட்டால் அதனைக் கட்டுப்படுத்துவது இலகுவா னதல்ல -என்றார்.

# சுற்றுலாவுக்காக நாடு திறக்கப்படுமாயின் மீளவும் பேராபத்தை எதிர்கொள்ள நேரிடும்

## பொது சுகாதார பரிசோதகர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, செப். 30

"நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு நீக் கப்பட்டு நாட்டைத் திறந்தவுடன் சகல செயற்பாடுகளுக்கும் இடமளிக்கக் கூடாது. குறிப்பாக சுற்றுலாவுக்காக நாடு திறக்கப்படுமாயின் நெருக்கடி நிலைமை களுக்கு முகங்கொடுக்க நேரிடும்."

- இவ்வாறு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது: -

"இலங்கைக்கான சுற்றுலா பயணங் களை மேற்கொள்ளும் நாடுகளில் மிக மோசமான வைரஸ் பரவல்கள் காணப்ப டுகின்றன. அதேபோல், தென்னாபிரிக்க வைரஸ் பல்வேறு நாடுகளில் பரவிக் கொண்டுள்ள நிலையில், நாம் தடுப் பூசியை நம்பி நாட்டைத் திறக்க முன்னர் நாட்டில் இறுக்கமான சுகாதாரக் கட்ட மைப்பொன்றை உருவாக்க வேண்டும்.

இலங்கையர்கள் நாட்டில் செயல் பாடுகளை முன்னெடுக்கும் வேளையில் கண்டிப்பான சுகாதார வழிமுறைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். அதே போல், வெளிநாட்டவர்கள் இலங்கைக்கு வருகின்ற நிலையிலும் சுகாதார வழி முறை களைப் பின்பற்ற வேண்டியது கட்டா யமாக்கப்பட வேண்டும்" - என்றார். (இ)

# லசந்தவின் படுகொலை வழக்கு ஹெய்க் மக்கள் தீர்பாயத்துக்கு

## ஊடக சுதந்திர அமைப்புக்கள் கொண்டு செல்கின்றன

ஹெய்க், செப். 30

இலங்கையின் புகழ்பெற்ற ஊடகவிய லாளரும், சன்டே லீடர் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியருமான லசந்த விக்கி ரமதுங்க படுகொலை செய்யப்பட்ட விவகாரத்தை உலகின் முன்னணி ஊடக சுதந்திர அமைப்புகள் ஹெய்க்கிற்கு கொண்டு சென்றுள்ளன. இதற்காக மக் கள் தீர்ப்பாயம் ஒன்றும் உருவாக்கப் படவுள்ளது.

லசந்தகொலை குறித்து விசாரணை செய்து அதற்கு காரணமானவர்களை நீதியின் முன் நிறுத்தும் நோக்கத்துடன் முன்னணி ஊடக சுதந்திர அமைப்புகள் மக்கள் இந்தத் தீர்ப்பாயத்தை உருவாக் கியுள்ளதாகவும், தீர்ப்பாயத்தின் விசார ணைகள் நவம்பர் இரண்டாம் திகதி ஹெய்க்கில் ஆரம்பமாகவுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

பிரான்ஸிலிருந்து செயல்படும் எல் லைகளற்ற பத்திரிகையாளர் அமைப்பு, பத்திரிகையாளர்களை பாதுகாப்பதற் கான அமைப்பு, Free Press Unlimited ஆகிய அமைப்புகள் பத்திரிகையாளர்கள் படுகொலை தொடர்பில் மக்கள் தீர்ப் பாயத்தை ஆரம்பிக்குமாறு நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தை கேட்டுக்கொண் டுள்ளன.

பொதுமக்கள் தீர்ப்பாயங்கள் பொது மக்கள் விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலமும் நியாயபூர்வமான ஆதாரங் களை உருவாக்குவதன் மூலம் நாடுகளை பொறுப்புக்கூறலிற்கு உட்படுத்து கின்றன. பொதுமக்கள் தீர்ப்பாயங்கள் பாதிக்கப்பட்டவர்களை வலுப்படுத்து வதுடன் அவர்களுடைய வாக்குமூலங் களை பதிவுசெய்கின்றன.

பத்திரிகையாளர்கள் தொடர்பான மக்கள் தீர்ப்பாயம் இலங்கையின் லசந்த விக்கிரமதுங்க மெக்சிக்கோவின் மிகுவல் ஏஞ்சல் லோபஸ் வெலாஸ்கோ சிரியா வின் நபில் அல்சர்பார்ஜி கொலைகள் தொடர்பில் நீதியை வழங்க தவறியமை தொடர்பில் இந்த நாடுகளிற்கு எதிராக குற்றச்சாட்டுகளை தாக்கல்செய்யும்.

இதேவேளை, லசந்த விக்கிரமதுங் கவின் படுகொலை குறித்து விசாரணை களை முன்னெடுக்கவுள்ள மக்கள் தீர்ப்பாயத்திற்கு லசந்த விக்கிரமதுங் கவின் மகள் அஹிம்ஸா விக்கிரமதுங்க தனது முழு ஆதரவையும் வெளியிட் டுள்ளார்.

## அமுலிலுள்ள....

நாட்டில் கொரோனா தொற்று நாள் ஒன்றில் 4 ஆயிரத்தை அண்மித்த நிலை யிலும், நாளாந்த மரணம் 100ஐ கடந்த நிலையிலும் பல தரப்பினரின் கோரிக் கைக்கு அமைய கடந்த, ஒகஸ்ட் 20 ஆம் திகதி முதல் ஊரடங்கு சட்டம் நடை முறைக்கு வந்தது.

தொடர்ச்சியாக 41 நாட்கள் நீடித்த இந்த ஊரடங்கு உத்தரவால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப் பட்டது.

இந்த நிலையில், நாளாந்த தொற்று ஆயிரத்துக்கும் குறைவாக பதிவாகி வரும் சூழ்நிலையிலும், நாளாந்த மரண எண்ணிக்கை தொடர்ச்சியாக குறைந்து வரும் நிலையிலும் தற்போது ஊரடங்கு சட்டம் நீக்கப்படுகின்றது.

எனினும், நாட்டில் கொரோனா தொற்று மேலும் அதிகரிக்காமல் தடுப்ப தற்கு பின்பற்றவேண்டிய சுகாதார வழிகாட்டுதல்கள் விரைவில் வெளி யிடப்படும் என்றும், திருமணம், பொது நிகழ்வுகளுக்கான தடைகள் தொடர்ச் சியாக இருக்கும் என்றும் இராணுவத் தளபதி மேலும் தெரிவித்தார். (ஐ)

# ரயில்கள் தயார்!

கொழும்பு, செப். 30

தனிமைப்படுத்தல் ஊர டங்கு உத்த ரவு தளர்த்தப்பட்ட தன் பின்னர் 50 அலு வலக ரயில் களை சேவையில் ஈடுபடுத்து வ தற்கு ரயில் திணைக்களம் தீர்மானித் துள்ளது.

ஊரடங்கு காலத்தில் சேவை யில் ஈடு படாத சில ரயில்களில் ஏற்பட்டிருந்த தொழில்நுட்பக் கோளாறுகள், மின் கோளாறுகள், ஆசனங்களில் திருத்தங் கள், பெயின்ட் வேலைப்பாடுகள் மற்றும் தொற்று நீக்கம் செய் யும் நடவடிக்கை கள் முன்னெடுக்க முடிந்ததாக ரயில் போக்கு வரத்து ஒழுங்குகள் பிரிவினர் தலைமை பொறியியலாளர் கே.ஜீ.எஸ் பண்டார தெரிவித்தார்.

அத்தோடு, தற்போது 91 ரயில்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்த் துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பிரதான ரயில் மார்க்கத்தில் 33 சேவைகளும், சிலாபம் மார்க்கத்தில் 14 சேவைகளும், வடக்கு மார்க்கத்தில் இரு ரயில் பயணங்களும், களனிவெளி மார்க்கத்தில் 8 ரயில் சேவைகளும் கடலோர மார்க்கத்தில் 34 ரயில் பயணங்களையும் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கையில்...

அறிக்கை யொன்றை வெளியிட் டுள்ள பாதுகாப்பு அமைச்சு, குறித்த செய்தி பகுப்பாய்வுக்குட்படுத் தப் பட்டதோ அல்லது உறுதிப் படுத்தப் பட்டதோ அல்ல என்று தெரிவித் துள்ளது.

எனவே, இவ்விதமான அடிப்படை யற்ற தகவல்கள் தொடர்பில் பொது மக்கள் அச்சமடையத் தேவையில்லை என்று பாதுகாப்பு அமைச்சின் செயலா ளர் ஜெனரல் கமல் குணரத்ன வலியுறுத் தியுள்ளார் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

ஈழநாடு
Eelanadu

# சிவப்பு எச்சரிக்கையில் இருந்து நாடு பூரணமாக விடுபடவில்லை

## சுகாதார மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை

கொழும்பு, செப்.30

**நாடு திறக்கப்பட்டாலும் கடுமையான சுகாதாரக் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும், இன்னமும் நாடு சிவப்பு எச்சரிக்கையில் இருந்து விடுபடவில்லை எனவும் சுகாதார மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

"நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப் பட்டுள்ள காலத்திலும் மக்களின் செயல்பாடுகள் முழுமையாகத் திருப்திகரமானதாக இருக்கவில்லை என்ற பொதுவான விமர்சனம் உள்ளது.

அதேபோல், பொதுப் போக்குவரத்தை மிகக் கவனமாக கையாள வேண்டியுள்ளது. பஸ்களில், ரயில்களில் 50 வீதமான பொதுமக்களுக்கே இடமளிக்க வேண்டும்.

நாட்டில் தற்போதும் டெல்டா வைரஸ் அச்சுறுத்தல் நிலைமை நீங்கவில்லை. நாடு முழுவதும் டெல்டா வைரஸ் பரவியுள்ள நிலையில் நாட்டில் 75 வீதமானோருக்கேனும் தடுப்பூசி ஏற்றாது நாட்டை மீளத் திறப்பது அச்சுறுத்தலான நிலைமையாகும்.

தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் நிறைவடையாது நாட்டைத் திறந்து வைரஸ் பரவலுக்கு மீண்டும் இடமளித்தால் மிகமோசமான தாக்கம் உருவாகும்.

எப்போதுமே நாம் ஏனைய நாடுகளை உதாரணமாகக் கொண்டு செயல்பட வேண்டிய கட்டாயம் உள்ளது.

கடந்த சில நாட்களாக நாட்டில் கோவிட் கொரோனா மரணங்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ள போதிலும், அச்சுறுத்தல் நிலையை நாம் கடக்கவில்லை. சிவப்பு எச்சரிக்கை நிலை குறைவடைந்துள்ளதே தவிர, எச்சரிக்கை நிலையில் இருந்து நாம் இன்னமும் விடுபடவில்லை" - என்றார். (இ)

# சஹ்ரானின் தொலைபேசிக்கு நடந்தது என்ன?

## விசாரணை கோரும் தயாசிறி

கொழும்பு, செப். 30

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சூத்திரதாரி சஹ்ரான் ஹாசிமின் கைத்தொலைபேசிக்கு என்ன நடந்தது என்பது குறித்து விசாரணை என்று நடத்தப்பட வேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர கேட்டுக்கொண்டார்.

குருநாகல் பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

சஹ்ரான் பயன்படுத்திய கைத்தொலைபேசியின் பாகங்கள் வெளிநாடொன்றுக்கு எடுத்துத் செல்லப் பட்டன என்றும், அது தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணைகளை முன்னெடுப்பதற்குப் பதிலாக, அரசியல் ரீதியான பழி வாங்கல்களை மேற்கொள்ள அரசு முயற்சிக்கின்றது என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தாக்குதலை நடத்தியவரின் தொலைபேசியில் எல்லா விடயங்களும் இருக்கும் நிலையில், தொலைபேசி வெளிநாடு ஒன்றுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

வெளிநாட்டுப் புலனாய்வுப் பிரிவொன்று குறித்த தொலைபேசியின் பாகங்களைக் கொண்டு செல்ல இலங்கையின் நீதிமன்றமும் பொலிஸாரும் அனுமதியளிப்பது கேள்விக்குறியாகும்.

அந்தத் தொலைபேசி பாகங்களைக் கண்டுபிடிப்பதன் ஊடாக தாக்குதலின் பிரதான சூத்திரதாரியைக் கண்டுபிடிக்கலாம்.

அதன்போதே, இதன் பின்னணியில் உள்ள அரசியல்வாதிகளையும் தேடிக்கொள்ளலாம்.

முன்னாள் ஜனாதிபதி அல்லது அமைச்சர்களுக்கு விரல் நீட்டுவதில் அர்த்தமில்லை. உண்மையான சூத்திரதாரிகள் அடையாளம் காணப்பட வேண்டும்" - என்றார். (இ)

# தொழிலாளர்கள் கைதுக்கு எதிராக தோட்ட மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம்

தலவாக்கலை, செப். 30

போலிக் குற்றச்சாட்டுகளைச் சுமத்தி 9 தோட்டத் தொழிலாளர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்து, தலவாக்கலை - கட்டுக்கலை தோட்டத் தொழிலாளர்களும் மக்களும் நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



கட்டுக்கலை தோட்டத் தில் தோட்ட அதிகாரிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட முறுகல் நிலை கைகலப்பாக மாறியதைத் தொடர்ந்து தாக்குதலுடன் தொடர்புடைய தொழிலாளர்களைக் கைதுசெய்யுமாறு வலியுறுத்தி தோட்ட அதிகாரிகள் நேற்றுப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், சம்பவம் தொடர்பில் 9 தொழிலாளர்களைத் தலவாக்கலை பொலிஸார் கைதுசெய்தனர். போலியான குற்றச்சாட்டுகளை முன் வைத்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர் எனவும், தோட்ட நிர்வாகமே அடாவடியில் ஈடுபட்டது எனவும் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

இதனைச் சுட்டிக்காட்டி தொழிலாளர்கள் நேற்று வேலைநிறுத்தப் போராட்டத்தில் இறங்கினர்.

"மலசலகூடம் அமைப்பதற்குக்கூட தோட்ட நிர்வாகம் அனுமதி வழங்குவதில்லை. ஆயிரம் ரூபா சம்பள விடயத்திலும் ஏமாற்றம் இடம்பெறுகின்றது.

6 மாதங்களுக்கு மேலாக நிர்வாகம் எம்மை அடக்கி ஆள முயற்சிக்கிறது. இந்நிலையிலேயே தோட்டத்தொழிலாளர்கள் பழி வாங்கப்பட்டுள்ளனர்" என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களும் தோட்ட மக்களும் குறிப்பிட்டனர். (இ)




## மரண அறிவித்தல்



**மலர்வு 01 -12-1938** **உதிர்வு 29-09-2021**

### திருமதி அருளையா தவமலர்

(இளைப்பாறிய ஆசிரியை- யாழ். கலாநிதி தங்கம்மா அப்பாகுட்டி வித்தியாசாலை)

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட அருளையா தவமலர் அவர்கள் 29.09.2021 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முத்தையா - சேதுபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற முத்தையா அருளையா (இளைப்பாறிய அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், செந்தில்வாசன் (நோர்வே), மைதிலி (யாழ். பல்கலைக் கழக கலைப்பீட விரிவுரையாளர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற கனகரத்தினம் சிவபாதம், காலஞ்சென்ற கனகரத்தினம் செல்வரத்தினம் ஆகியோரின் அன்புச்சகோதரியும், வனமாலா செந்தில்வாசன், றோஸ் சிவபாதம் (பிரான்ஸ்), ஜோர்ச் சிவபாதம் (பிரித்தானியா), அன்ரன் றோய் சிவபாதம் (பிரித்தானியா) ஆகியோரின் அன்பு மாமியும், பவன், நிருத்தன் ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (30-09-2021) வியாழக்கிழமை மு.ப 10:00 மணியளவில் முருகநாமம் மல்லாகத்தில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் வலி.வடக்கு கட்டுப்பிட்டி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**
செந்தில்வாசன் (மகன்)
+4791395529
மைதிலி(மகள்):
+94212227213

தகவல்:
**குடும்பத்தினர்.**




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 30.09.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்




6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் உளவள துனையாளர் திரு.நா. நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி-ஜோன்சன் ராஜ்குமார்
ஆசிரிய ஆலோசகர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ மறுஒளிபரப்பு
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை

**பகல்**
1.00 மணி : நலம்தானா-மறுஒளிபரப்பு
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-கொம்பன்,பாபநாசம் திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை-அனெபெல் சேதுபதி




**இரவு**
7.00 மணி : சமையல் சமையல்
7.30 மணி : வெள்ளிடை நுட்பம்-தொழில்நுட்பம் பயன்பாடுபற்றிய நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : மாதம் ஒரு இசைக்குழு-மறுஒளிபரப்பு
10.00 மணி : நேருக்கு நேர்-அரசியல் நிகழ்ச்சி

DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : உ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : அன்னை மரியா (மறுஒளிபரப்பு சனி)
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஞானவழி மறு ஒளிபரப்பு ஞாயிறு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)

Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்